A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 28 / 2024**

திரு A. ஜெயகோபால்,
வாழ்க வளமுடன் இல்லம்,
எண்.3, வாழ்க வளமுடன் தெரு,
திண்டுக்கல் – 624 001.

………மேல்முறையீட்டாளர்
(திரு A. ஜெயகோபால்)

எதிர்

செயற்பொறியாளர்/ வடக்கு/ திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சி நாயக்கன்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் – 624 002.

. . . எதிர்மனுதாரர்
( திருV.P.முத்துகுமார், செயற்பொறியாளர்/ வடக்கு/ திண்டுக்கல்)

**மனு பெறப்பட்ட நாள்: 22-04-2024**

**கேட்புரை நாள்: 06-06-2024**

**ஆணை நாள்: 04-07-2024**

22.04.2024 அன்று பெறப்பட்ட திரு A. ஜெயகோபால், வாழ்க வளமுடன் இல்லம், எண்.3, வாழ்க வளமுடன் தெரு, திண்டுக்கல் – 624 001 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 28/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 28.05.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது மின் இணைப்பு 220-006-15, 220-006-760 மற்றும் 220-006-952-இல் சூரிய ஒளி அமைப்பின் மூலம் மின் உற்பத்தி செய்த நிலையில், எதிர்மனுதாரரால் கூடுதலாக கட்டணம் செலுத்த வலியுறுத்தும் செயலை நிராகரிக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது மின் இணைப்பு எண்களில் 220-006-15, 220-006-760 மற்றும் 220-006-952 சூரிய ஒளி அமைப்பின் மூலம் மின் உற்பத்தி செய்த நிலையில், எதிர்மனுதாரரால் கூடுதலாக கட்டணம் செலுத்த வலியுறுத்தும் செயலை நிராகரிக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மின் இணைப்பு பெறும் போது அளித்த உத்திரவாதத்தின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் சோலார் பேனல்களை பயன்படுத்தாமல் தன்னிச்சையாக எந்தவித அனுமதியும் உரிமதாரரிடம் பெறாமல் கூடுதல் பளுவை இணைத்து பயன்படுத்தியதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே மேல்முறையீட்டாளர் திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 30.08.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம், 01.03.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு :**

3.1 திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 01.03.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*7.1 The petition filed by Thiru K. Jeyaraman was originally given solar energy connection under net metering scheme governed by TN solar energy policy 2013.*

*7.2 Under this scheme, applicants were given new solar roof top connection up to sanctioned load of existing services upto 30% of DT capacity as first come first served basis.*

*7.3 Applications for installation of additional capacity were not allowed.*

*7.4 After release of TN solar energy policy 2019 on 04.02.2019, commission in its order no.3 of 2019 dt.25.03.2019 provides for connection of rooftop solar at a local distribution level upto 90% of DT capacity but limited to 100% of sanctioned/contracted demand of the existing service. Since restriction to grid penetration is raised to 90% of DT capacity, applications for additional capacity in LT solar net feed-in services are being processed in the above order.*

*7.5 The commission in the order no.32 of 2020 also finds that "who requires additional solar PV capacity may furnish willingness to change over to the net feed-in scheme in entirety and furnish an undertaking to the said effect and made it clear that consumer under the net metering scheme should continue to be governed by order no.3 of 2013 dt. 13.11.2013*

*7.6 In accordance with the above policy, this forum agrees that no additional load application can be given by the petitioner who was originally given under net metering scheme of the solar policy 2013*

*7.7 The forum finds the assumption of petitioner that he had erected additional panels with a assumption of helping TNEB is unlawful and against the provision of TN solar policy 2013 under net metering scheme. By erecting additional solar panels in his existing services, the petitioner has indulged in clear violation of TN solar policy 2013*

*7.8 In regards to the request of the petitioner to cancel the bill, issued by the respondent in Lr.No.உமி.பொ/ந.பே/திகல்/கோ,கட்டு/அ.எண்.055/22 . 24.06.2022, the forum takes into account the clarification issued by the Licensee on 5.2.24 which is reproduced below:*

> *As per the Hon'ble TNERC GISS Regulation and Order no.8 at 22.10.2021, Clause 11.4 General;*
>
> *"For the purpose of billing the import, export and net energy, the units and other allied parameters recorded in the respective import and export and net register of the consumer bidirectional meter shall be reckoned respectively. The maximum demand recorded in the gross generation meter or inverter as the case may be shall not exceed the sanctioned/ contracted plant capacity of GISS in any billing cycle. If the demand exceeds the sanctioned limit in any billing cycle, the quantum of exported units recorded in the bidirectional*

*meter during the respective slots in case of gross metering and respective billing cycle in case of net-metering and net billing, proportionate to the portion of demand that exceeded over the sanctioned limit, shall be treated as inadvertent injection in to the grid and shall not be eligible for payment by the Licensee."*
*Further as per TNERC Regulation Clause 8.5. Inter-Connection with the Grid, Standards and safety:*
*"In case any GISS plant is found to be running in parallel with the supply system of the distribution licensee without approval then supply of such consumer may be disconnected with 3 days notice and the supply shall be restored only after the plant is isolated from the supply system of the licensee.*
*Such consumer apply for GISS plant in the next financial year but his application will be kept at the bottom of the list of applicants. Such consumer will be permitted to set-up the plant only if after allotting the capacity to all successful applicants above him, there is still capacity available for allotment."*
*Hence, the proposal to recover the amount of Rs. 7,79,656/- payment made by way of adjustment in CC charges against illegal injection of solar energy is in order.*

*The forum agreed with the action of respondent to get back the payment made for the inadvertent injection of energy into the grid over the sanctioned limit. Hence the request of the petitioner to cancel the bill is rejected."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 06.06.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு A. ஜெயகோபால் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திருV.P.முத்துகுமார், செயற்பொறியாளர்/ வடக்கு/ திண்டுக்கல், திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள்

சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் 24.11.2023ம் தேதியன்று நடந்த மின் நுகர்வோர் குறைதீர் மறை கூட்டத்தில் Chair Person ஆக இருந்த SE/DINDIGUL அவர்கள், மின்வாரிய அதிகாரிகளிடம் 6 மாதத்திற்குதானே பில் revise செய்ய சொல்லப்பட்டுள்ளது ஏன் பல வருடங்களுக்கு revise செய்திருக்கிறீர்கள் என் கேட்டுவிட்டு, demand ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ஆனால் சென்னை அலுவலக அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டியுள்ளது என்று தெரிவித்ததாகவும், வேறு எந்த விசாரணையும் நடைபெறவில்லை விசாரணை 5 நிமிடங்கள் மட்டுமே நடந்ததாகவும், ஆனால் ChairPerson அளித்த உறுதிக்கு முற்றிலும் மாறாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 கூடுதல் சோலார் பேனல்கள் அமைக்கப்பட்டது திருட்டு வேலை அல்ல ஒவ்வொரு கட்டத்திலும், export அதிகம் ஆகும் போதெல்லாம், மூன்று முறை, வாரியத்தால் development charges–ம், testing fees–ம் பெறப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், Testingன் காலகட்டத்தில் கூடுதல் பேனல் அமைக்கப்பட்டுள்ளதைப்பற்றி ஏதுமே கேட்கப்படாமல் பல ஆண்டுகளாக அனுமதிக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 வாரியத்தின் அனுமதியுடன்தான், சோலார் பேனல்கள் அதிகரிக்கப்பட்டது என்பதை நிரூபிக்க, ஏற்றுமதி அதிகரித்த போதெல்லாம் கூடுதல் development charges testing feesம் பெற்று TEST செய்யப்பட்டுள்ளதாகவும், பல ஆண்டுகளாக, மறுப்பேதும் சொல்லாமல், மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டு, தான் வாரியத்திற்கு அளித்த யூனிட்டுகளுக்கு ரூபாய் தரவேண்டும் என்பது எந்த நியாயத்திற்கும் புறம்பானது எனவும்,

இப்படி ஒப்புக்கொள்ளப்பட்டதை மறைத்து பணம், கட்டச் சொல்வது நியாயமல்ல எனவும், ஏதும் மறைவாக செய்யப்பட்ட செயல் அல்ல எனவும், வாரியத்தின் அனுமதியுடன்தான் நடந்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 கீழ்கண்ட நெட் மீட்டரிங் சர்வீஸ்கள் தன் பெயரில் உள்ளதாகவும், 220-006-952, 220-006-15 மற்றும் 220-006-760 AE/T/Bus stand அவர்களின் 24.06.22-ம் தேதிய கடிதத்தின்படி தன்னுடைய 3 நெட் மீட்டரிங் சர்வீஸ்களில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக சோலார் பேனல்களை தான் நிறுவியுள்ளதாகவும் அதனால் கீழே உள்ளபடி பணம் 30 நாட்களுக்குள் செலுத்தவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளதாகவும், கடிதத்தில் சர்வீஸ் எண்கள் 220-006-952, 220-006-15, 220-006-789 என குறிப்பிட்டு, இணைப்பில் 220-006-952, 220-006-15, 220-006-789 என உள்ளதாகவும், எந்தந்த சர்வீஸ் எண்களில் பிரச்சனை என்பதே குழப்பமாக உள்ளதாகவும், ஒவ்வொரு சர்வீஸிலும் செலுத்தப்படச் சொல்லும் தொகை கீழே உள்ளது

| | | |
|---|---|---|
| 1.220-006-952 | - ரூ.66916 | 09.03.18 முதல் 11.03.22 வரை |
| 2.220-006-15 | - ரூ.690835 | 13.09.19 முதல் 11.03.22 வரை |
| 3.220-006-760 | - ரூ.21905 | 09.03.16 முதல் 10.05.21 வரை |

AE/T/Bus stand அவர்களின் 18.05.22-ம் தேதிய கடிதத்தில் அனுமதிக்கப்பட்ட மின்பளு கீழே உள்ளபடி குறிப்பிடப்பட்டுள்ளது.

220-006-952-3000 W, 220-006-15 - 1850 W, 220-006-789-4000 W, 3 Phase stab 4KW-க்கு மேல் மின்பளு இருந்தால் மட்டுமே தரப்படும் நிலையில் சர்வீஸ் எண்.220-006-15-ல் அனுமதிக்கப்பட்ட மின்பளு 1850 W என்பது பொருத்தமில்லாதது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள Eligible Units கீழே உள்ளபடி 220-006-952-900 units, 220-006-15-553units, 220-006-760-600units எந்த அடிப்படையில் இந்த Eligible Units தீர்மானிக்கப்பட்டன என தெரியவில்லை எனவும், 3000 W சர்வீஸ்க்கு Eligible Units 900, 4000W Eligible Units 600 சர்வீஸ் எண். 0522000615-ல் 1.85Kw·க்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளதாகவும், இது ஒரு நீண்ட கால 3 Phase சர்வீஸ் 4

Kw–க்கு மேலாக Load இருந்தால் மட்டுமே 3 Phase மின் இணைப்பு பெற முடியும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் இந்த சர்வீஸ் எண்ணுடன் 0522000616, 0522000620 ஆகிய இரண்டு சர்வீஸ்களும் 2.7.19–ல் தான் கேட்டுக்கொண்டபடி merge செய்யப்பட்டுள்ளதாகவும், அவற்றின் Sanctioned load களும் சர்வீஸ் எண். 0522000615–உடன் சேர்க்கப்பட்டிருக்கும் எனவே சுமார் 6Kw அளவிற்காவது இந்த எண்ணில் sanctioned load இருக்கும் எனவும், அப்படி இருக்கையில், தனக்கு அனுமதிக்கப்பட்ட மின்பளு 1.85Kw என்பது சரியல்ல எனவும், இந்த சர்வீஸ் 12.7.19–ல் நெட் மீட்டரிங் சர்வீசாக மாற்றப்பட்டதாகவும், இந்த சர்வீஸில் சோலார் பேனல்களை அதிகப்படுத்த விரும்பி (Capacity addition to existing solar panels)AE–யிடம் விண்ணப்பம் கொடுத்த போது, கமர்சியல் சர்வீஸ்களில் Solar panel capacity அதிகப்படுத்த கம்யூட்டரில் Option இல்லை என திருப்பித் தரப்பட்டுவிட்டதாகவும், DE–யிடம் கேட்ட போது, இந்த Option– சென்னை அலுவலகத்திலிருந்துதான் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 Getting approval for erection of additional solar panels was not possible since there was no option in the link to apply for commercial purpose, unlike domestic sector. This was represented to DE many times, but no solution was given, saying that it had to be done at Chennal Office. வேறு வாய்ப்பில்லாமல் போகவே நெட் மீட்டரிங் சர்வீஸில் எல்லா export and import விபரங்கள் பதிவாகிறதாலும், இந்திய அளவில் சோலார் பேனல்கள் அமைப்பது ஊக்கப்படுத்தப்பட்டு, தமிழகம் முதல்நிலையில் இருப்பதாலும், நாம் நல்லதுதானே செய்கிறோம் என்ற எண்ணத்தில் சோலார் பேனல்களின் அளவை அதிகரித்துவிட்டதாகவும், எதிர்பார்த்தபடியே வாரியத்தில் இருந்து எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 வாரியமும் சில ஆண்டுகளாக மின்சாரத்தை ஏற்றுக் கொண்டது. இதில் எந்த விதமான ஏமாற்றுச் செயல்களும் இல்லை. எத்தனை கிலோவாட், எத்தனை யூனிட் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதெல்லாம் வெளிப்படையானது. மறைக்க இயலாதது

எனவும், Export development charges– testing fees– ல்லில் சேர்க்கப்பட்டு, கீழே உள்ளபடி பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும்,

18.1.20– Development charge.10000, testing fees 75

17.7.20– Development charge.1000, testing fees 75

12.11.20– Development charge 4000, testing fees 75

இவ்வாறு தன் செயல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் எந்த ஒளிவு மறைவோ ஏமாற்றுதலோ இல்லை எனவும், Additional solar panels were erected, thinking that it would be approved as a routine, since it has been accepted by Board, by collecting testing fees and additional development charges, whenever export MD rises. At this stage, AE Informed that, applying for erecting of additional solar panels has to be done online only. But there was no option in the link. This was brought to the notice of AE, AEE and EE. It was said that it has to be done at Chennai office only. After my pursuing with the Headquarters, Chennal, the omission for applying online for commercial services was realized, corrected and communicated. Immediately, application for regularizing erection of additional panels was filed online and charges as intimated was paid. மின்வாரியம் தன் தாய்வீடு போல, அதை ஏமாற்றும் நோக்கமில்லை எனவும், வாரியம் ஆட்சேபனை இன்றி ஏற்றுக்கொண்டால்தான் அதிக பேனல்கள் அமைத்ததாகவும், எனவே, கடித எண். DE/N/DGL/AAO/RBN/DGL/AS4/F.Solar/ D.No.569/2022, dt 6.6.22–ல் கேட்கப்பட்டுள்ள demand–ஐ ரத்து செய்யுமாறும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 சர்வீஸ் எண் 220–006–15–ல் மார்ச் 2022 வரை மின் கட்டணம் சுமார் 3000/– ரூபாய்க்கும் குறைவாகத் தான் வந்து கொண்டிருந்தது. ஆனால் 11.5.22–ல் ரூ.69918–ம் 11.7.22–ல் 71158–ம் செலுத்தச்சொல்லி demand வந்து செலுத்தியிருப்பதாகவும், மார்ச் 2022 வரை எப்படி பில் போடப்பட்டதோ, அதுபோலவே கணக்கிட்டு செலுத்திய கூடுதல் பணத்தை திருப்பித் தர உத்தரவிடுமாறும், மேலும் ஒரு KW சோலார் பேனலிருந்து சுமார் 3 யூனிட் மின்சாரம் தான் தயாரிக்க முடியும் என்பது சரியல்ல. திண்டுக்கள் போன்ற மிக அதிக வெப்பமுள்ள இடத்தில் 6 யூனிட்டுக்கும் மேலாகவே கிடைக்கிறதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 சோளர் பேனலில் இருந்து, எவ்வளவு மின்சாரம் வாரியத்திற்குத் தரப்பட வேண்டும் என்ற அளவு ஏதேனும் இருந்தால் (Celling, if any )அந்த அளவைத் தாண்டும் போதே நடவடிக்கை எடுத்திருக்கலாம் Development charge Testing fees என்றெல்லாம் அவ்வப்போது விதித்து பெற்றுக்கொண்டு சில ஆண்டுகள் மின்சாரத்தையும் பெற்றுக் கொண்டபின், சில லட்சம் பணம் செலுத்தச் சொல்வது நியாயத்திற்கு அப்பாற்பட்டதாகவும், பல லட்ச ரூபாய்களை முதலீடு செய்திருக்கமாட்டேன் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 சுமார் 45 ஆண்டுகள் முன்னர் தான் திண்டுக்கல்லில் மின்வாரிய உதவிப்பொறியாளராகப் பணியில் இருந்ததாகவும், அப்போது அலுவலகத்தில் அப்போதைய பிரதம மந்திரி இந்திராகாந்தி அவர்கள் சொல்லியிருந்து Mistakes may be made in good faith என்பதை எழுதி வைத்திருந்ததாகவும், அந்த கருத்தில் தான், நான் கூடுதல் சோலார் பேனல்கள் அமைத்ததும், லஞ்சம் வாங்குவது குற்றம் என்றே காலம் இருந்தது. சில பத்தாண்டுகளாகத் தான் "லஞ்சம் கொடுப்பதும் குற்றம் 'என்றானது, அது போல தான் அதில் பேனல்கள் அமைத்து வாரியத்திற்குக் மின்சாரம் கொடுத்தது தவறெனில், எந்த ஆட்சேபனையும் இன்றி பல ஆண்டுகளாக, மின் வாரியம் பெற்றுக் கொண்டதும் deemed to have been approved.

5.12 Development Charges, Testing fees செலுத்தியதுபோல் திரித்துக் கூறியிருப்பது முற்றிலும் மறுக்கப்படுகிறது" என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், COMPUTER PRINTOUT ல் சர்வீஸ் எண். 220-006-15ன் ACCOUNT SUMMARY ல்

18.1.20 Development Charges 10,000, Tasting fees 75

17.7.20 Development Charges 1,000, Testing fees 75

12.11.20 Development Charges 4,000, Testing tees 75 செலுத்தியுள்ளதாக காட்டுகிறது என்றும், ஆனால் அது LOAD REGULARISATION CHARGES என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 LOAD REGULARISATION CHARGES என்றால் என்ன? 'நீங்கள் கூடுதலாக மின் பளுவை உபயோகித்துக்கொள்ளுங்கள்; நாங்கள் அதை முறைப்படுத்தும் பொருட்டு

கட்டணம் பெற்றுக்கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். அதுதான் முறைப்படுத்தி விட்டார்களே! பின் ஏன் பல்லாண்டுகளுக்கு BILL REVISION?

5.14 Development Charges and Testing fees என்று account summary clear ஆக காட்டும்போது, தான் திரித்துக் கூறுவதாக சொல்லப்பட்டுள்ளதாகவும், உண்மைத்தன்மையை அறிய இந்த ஒரு செய்தியே போதும் எனவும், CGRF விசாரணை 5 நிமிடங்களே நடந்ததாகவும், வேறு எந்த விசாரணையுமே நடை பெறவில்லை" என்று தான் தெரிவித்துள்ளது 'உண்மைக்குப் புறம்பானது' என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், பத்திவாரியாக அவர்கள் பதில் கேட்டிருந்தும், எவ்வளவு நேரம் விசாரணை நடந்தது என்றோ, விசாரணையில் தன்னிடம் என்ன கேள்விகள் கேட்டு, என்ன பதில்கள் பெறப்பட்டன என்றோ தெரிவிக்கவில்லை. CHAIR PERSON 5 நிமிடத்தில், 4 நிமிடம் AEEயிடமும் DFCயிடமும்தான் பேசிக்கொண்டிருந்தார் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 AEE அவர்களிடம் மார்ச்சிலிருந்துதானே REVISE செய்ய சொல்லப்பட்டது' என்று கேட்டதாகவும். அதன் பின், தன்னிடம் "ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ஆனால் சென்னை அலுவலகத்தில் அனுமதி பெற்றுதான் செய்யவேண்டும்' என்று CHAIR PERSON சொன்னதால், தான் எந்தக் கருத்தும் தெரிவிக்க வேண்டியதில்லாமல் போய்விட்டதாகவும், தான் சொல்வது 'பொய்' என்று சொல்லாமல், உண்மைக்குப் புறம்பானது என்று ஏன் சொல்கிறார்கள் என புரியவில்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.16 மூன்று முறை TESTING FEES பெறப்பட்டுள்ளதாகவும், யாருமே வந்ததில்லை. என்ன டெஸ்ட் செய்தார்கள்? கூடுதல் பேனல்கள் அமைக்கப்பட்டது 2020லேயே தெரியவில்லையா? ஏன் எந்த நடவடிக்கையுமே எடுக்கவில்லை? என்றும் வினவியதாகவும், CGRFல் இருந்து பதில் தெரிவிக்க 15 மாதங்களா, CGRFல் இருந்து இந்த பதில் கிடைப்பதற்கு இரண்டு மாதங்கள் முன்னர், AEE/T/DGL அவர்கள். தன்னை போனில் கூப்பிட்டு, உங்கள் மனுவிற்கு சென்னையிலிருந்து எந்த பதிலும் இல்லாமல் இருக்கிறது. சென்னைக்குப் போய் வரலாமா, எனக் கேட்டதாகவும், இப்படி ஏன் தன்னைக் கூப்பிட்டார் என புரியவில்லை எனவும், CHAIRPERSON, DEMAND

ரத்துசெய்யப்படும் என சொல்லியிருக்கும்போது, 'நாம் ஏன் போகவேண்டும்' என மறுத்துவிட்டதாகவும், இதையும், 'இவ்வாறு எந்தப் பேச்சும் நடை பெறவில்லை என AEE/T/DGL மறுக்கத்தான் போகிறார் என்றும் உண்மைக்குப் புறம்பானது என்று சொல்லப் போகிறார் என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.17 இந்தப்பிரச்சனையின் ஆரம்பத்தில் கூடுதல் பேனல்கள் அமைக்க ONLINE ல் விண்ணப்பிக்க முயற்சித்தேன் வீட்டு சர்வீஸ்களுக்கு மட்டுமே OPTION இருந்தது COMMERCIAL SERVICE–களுக்கு OPTION இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். AEயிடம் விண்ணப்பம் கொடுத்ததாகவும் அவரும் கம்ப்யூட்டரில் பார்த்துவிட்டு, OPTION இல்லை என திருப்பிக் கொடுத்துவிட்டார் என்றும் தான் பதிவுத் தபாலில் அனுப்பாமல் விட்டுவிட்டதால் இப்போது ஆதாரம் இன்றி நிற்பதாகவும், AEEயையும், EEயையும் சந்தித்து சொன்னதாகவும், அப்போதைய EE/N/DGL அவர்களும் "இது சென்னை அலுவலகத்தில்தான் செய்யப்படவேண்டியது" என்று மட்டுமே சொன்னதாகவும், AE, AEE, EE யாருமே இந்த OPTIONஐ ஏற்படுத்த முயற்சி செய்யவில்லை தான் முன்னரே தெரிவித்தபடி, MISTAKES MAY BE WELL MADE IN GOOD FAITH என்ற கருத்தில், வாரியத்திற்கு நன்மைதானே செய்கிறோம், வாரியத்திற்கு செலவில்லாமல் மின்சாரம் உற்பத்தி செய்து தரப்போகிறோம்; இதற்கு என்ன ஆட்சேபனை ஏற்படப்போகிறது' என்று கூடுதல் பேனல்கள் அமைத்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.18 எதிர்பார்த்தபடியே வாரியம் மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டு, Development Charges and Testing fees வாங்கிக்கொண்டு, தன்னைத் தொடர அனுமதித்ததாகவும், மூன்று முறை Development Charges and Testing fees பெற்று தன் செயல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து தன் EXPORT ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், ஆனால் 2022ல் திடீரென சுமார் 8 லட்சம் செலுத்தச் சொல்லி உத்தரவு எதற்காக? தான் வாரியத்திற்கு அளித்த மின்சாரத்திற்கு கடிதத்தில், 'சோலார் மின் இணைப்பு பெற்ற தாழ்வழுத்த மின் இணைப்புகளில் அனுமதிக்கப் பெற்ற மின் பளுவைவிட கூடுதலாக பயன்படுத்தியதற்கு மனுதாரர் உரிய முறையில் விண்ணப்பம் அளிக்கத் தவறியதால், மின் வாரியத்தாலேயே தாழ்வழுத்த மின் பளுவானது முறைப்படுத்தப்பட்டு அதற்குரிய கட்டணம் மட்டுமே மனுதாரரிடம் இருந்து வசூல் செய்யப்பட்டுள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.19 முறைப்படுத்தப்பட்டு கட்டணம் பெற்றுக்கொண்ட பிறகு, அது எப்படி முறை கேடாகும்? விண்ணப்பம் அளிக்கத் தவறியதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? கூடுதல் பேனல்கள் அமைத்து, அதிக மின்சாரம் உற்பத்தி செய்ததை நியாயப்படுத்தும் விதமாக கூறியிருப்பது ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல' என்று கடிதத்தில் உள்ளதாகவும், ஒப்புக்கொண்டுதானே மூன்று முறை Development Charges and Testing fees வாங்கிக் கொண்டிருப்பதாகவும், COMPUTER PRINTOUTல் CLEAR ஆக Development Charges and Testing tees என்று காட்டப்பட்டுள்ளதாகவும், ஆனால் தான் திரித்துக் கூறுவதாக சொல்லப்பட்டுள்ளதாகவும், Development Charges and Testing feesஐ LOAD REGULARAIZATION கட்டணம் என திரித்துக் கூறுவது யார்? எனவும், வாரியத்திற்கு நன்மை செய்த தன்னை நசுக்கப் பார்க்கிறார்கள் என்றும் உரிய நீதி வழங்க வேண்டுவதாகவும், இதற்கும் மேலாக, கடித எண். உ.மி.பொ./ந.பே/திகல்/ கோ சோலார்/அ.எண். 96/22 dt 30.9 22–இல் தன்னுடைய சோலார் மின் பளு விண்ணப்பம் ரத்து செய்யப்படுகிறது என்றுள்ளதாகவும், தன்னுடைய விண்ணப்பத்தை AE ரத்து செய்ய முடியுமா? அதற்கு தெரிவிக்கப்படும் காரணம், 'தன் விண்ணப்பம் PENDINGல் இருப்பதால், ரீடிங்கைப் பதிவு செய்ய SOFTWARE அனுமதிக்க மாட்டேன்' என்கிறதாம். 'என்ன செய்வது? எங்க SOFTWARE அப்படி உள்ளது' என்றார் என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.20 தன்னுடைய விண்ணப்பத்தை, தானே கடிதம் எழுதிக் கொடுத்து திரும்பப் பெற்றுக்கொள்ள AE AEE வற்புறுத்தியதாகவும், 'எழுதிக் கொடுக்காவிட்டால், பாத்துக்கலாம்' என AE மிரட்டினார். EEயை சந்தித்துக் கேட்டதற்கு 'விண்ணப்பத்தை ரத்து செய்யுங்கள். ரீடிங் ENTRY போட்டதும், மறுபடி விண்ணப்பம் கொடுங்கள்' என்றதாகவும், வாரியம் போன்ற பெரிய அமைப்புடன் முடியாது என்பதால் விண்ணப்பத்தை ரத்து செய்ய எழுதிக் கொடுத்ததாகவும், இதற்கு பரிசாக மீட்டர் ரீடிங்கைப் பதிவு செய்வதற்கான கடைசி தேதி முடித்துவிட்டது என அபராதக் கட்டணம் ரூ700/– சேர்த்து வாங்கினார்கள் என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.21 இந்தச் செய்தியை CGRFல் தெரிவிக்க கடிதம் எழுதிக் கொண்டு போனதாகவும் டிமாண்ட் ரத்து செய்யப்படும் என தெரிவித்ததால், 700ரூ இழப்பை பெரிதுபடுத்த வேண்டாம் என தன் கடிதத்தைத் தரவில்லை என்றும், கூடுதல் பேனல்கள் அமைக்க,

ONLINEல் விண்ணப்பிக்க வீட்டு சர்வீஸ்களுக்கு மட்டுமே OPTION இருந்தது COMMERCIAL SERVICE களுக்கு OPTION இல்லை எனவும், அந்த மாதிரியான OPTION கம்ப்யூட்டரில் இல்லை என்பதே தான் சொல்லித்தானே வாரியத்திற்கே தெரியவந்ததாகவும், தன் முயற்சியால் அந்த OPTION ஏற்படுத்தப்பட்டு சமுதாயத்திற்கே நன்மை கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திண்டுக்கல் மின் பகிர்மான வட்டத்தில் உள்ள உதவி மின் பொறியாளர்/ நகர்/ பேருந்து நிலையம் பிரிவுக்குட்பட்ட "D" YMR Patty மின் பகிர்மானத்தில் திரு. K.ஜெயகோபால், வாழ்க வளமுடன் இல்லம், எண்–3, வாழ்க வளமுடன் தெரு, திண்டுக்கல் என்பவரது பெயரில் 220–006–952, 220–006–760 மற்றும் 220–006–15 ஆகிய சோலார் மின் இணைப்புகள் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேற்கண்ட மின் இணைப்புகளில் அனுமதிக்கப்பட்ட சோலார் மின் பளுவினை விட கூடுதல் சோலார் பேனல்களை முறையான அனுமதியின்றி இணைத்து (Unauthorised Injection) தன்னிச்சையாக பயன்படுத்தி மேல்முறையீட்டாளர் கீழ்கண்டவாறு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

| வ.எண் | மின் இணைப்பு எண் | இழப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | 220–006–952 | ரூ.66916/– |
| 2 | 220–006–15 | ரூ.690835/- |
| 3 | 220–006–760 | ரூ.21905/– |

6.2 மேற்கண்ட இழப்பீட்டு தொகையை வசூல் செய்யும் பொருட்டு உதவி மின் பொறியாளர் /நகர் பேருந்து நிலையம்/திண்டுக்கல் அவர்களால் கடிதம் வழங்கப்பட்டு இழப்பீட்டு தொகையை செலுத்த மறுத்து மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் (CGRF)/திண்டுக்கல்லில் முறையீடு செய்ததில் இழப்பீட்டு தொகையை செலுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் திரு K. ஜெயகோபால், வாழ்க வளமுடன் இல்லம், 3 வாழ்க வளமுடன் தெரு, திண்டுக்கல்–624001, அவர்கள் மேற்கண்ட பார்வை (1)ன் படி Tamil Nadu Electricity Ombudsman–ல் மேல்முறையீடு செய்துள்ளதாகவும், அந்த மேல்முறையீட்டு மனுவிற்கு பார்வை (2) ன்படி ஏற்கனவே பத்திவாரி பதிலுரை சமரப்பிக்கப்பட்டு மேல் முறையீட்டாளருக்கும் நகல் அனுப்பப்பட்டுள்ளது என்றும், அதனை தொடர்ந்து பார்வை

(3)ன் படி மேல்முறையீட்டாளர் கோரியுள்ள கூடுதல் விவரங்களுக்கு கீழ்கண்டவாறு பத்திவாரி பதிலுரை சமர்ப்பிக்கப்படுவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேல்முறையீட்டாளர் தன்னுடைய 220-006-15 என்ற மின் இணைப்பின் Account summary ல் செலுத்தியதாக உள்ள Development charges மற்றும் Testing Fees குறித்து விளக்கம் கோரியுள்ளதாகவும், மேலும் Load Regularisation Charge என்றால் என்ன? என வினவி கூடுதல் மின் பளுவை முறைபடுத்திய பின்பு ஏன் தனக்கு Bill Revision செய்யப்பட்டுள்ளது என கோரியுள்ளதாகவும், மேலும் Development charges, Testing Fees மற்றும் Load Regularization என கூறி மின் வாரியம் நன்மை செய்த தம்மை நசுக்க பார்க்கிறார்கள் என கூறியுள்ளதாகவும், மேற்கூறிய நுகர்வோரின் வினாவிற்கு கீழ்கண்டவாறு பதில் அளிக்கப்படுவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேல்முறையீட்டாளர் மூன்று சோலார் மின் இணைப்புகள் வைத்துள்ளதாகவும் அவரது மின் இணைப்புகளில் Bidirectional with MD recording facility meter பொருத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். TNERC Supply code regulation 5(2)(B)- ன் படி "For services with contracted demand less than or equal to 18.6 KW (25HP) whenever the consumer connected load exceeds the contracted demand, the licensee shall install meters with demand recording facility and bring the consumer under the scope of excess demand chargeable category. After installation of the meter, if the recorded demand is in excess of contracted demand, the existing demand, shall after intimation to the consumer, be revised to the level of recorded demand and all relavant charges applicable for extending of additional demand shall be included in the next bill. No excess demand charge is leviable till such time the license installs meter with demand recording facility and bring the consumer under the scope of excess demand chargeable category (From 13.06.2007).

இதன் அடிப்படையில் 220-006-15 என்ற மின் இணைப்பில் Static Electronic Meter with MD recording facility கடந்த 10.06.2014 அன்று மாற்றப்பட்டு அந்த மின் இணைப்பானது Excess demand chargeable category க்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 220-006-15 என்ற மின் இணைப்பில் Static Electronic Meter with MD recording facility மாற்றிய பிறகு MD exceeds 2 or more times என்ற அடிப்படையில் மின் பளு 1 kw லிருந்து 1.85kw -ற்கு கடந்த 04.07.2015 அன்று load revision செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்குரிய கட்டணங்கள் நுகர்வோரின் மின் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 02.07.2019 அன்று மேல்முறையீட்டாளரின் மனுவின் அடிப்படையில் அந்த கட்டிடத்தில் இருந்த 220-006-20 (1 kw) மின் இணைப்புகளானது 220-006-15 என்ற மின் இணைப்புடன் இணைக்கப்பட்டு (Merging) 220-006-15 மின் இணைப்பில் Santioned Load 3.85W ஆக மாற்றி அமைக்கப்பட்டது. 26.07.2019 அன்று 220-006-15 என்ற மின் இணைப்பில் 1.85 kw அளவிற்கு மட்டும் solar PV capacity அனுமதிக்கப்பட்டு Bi Directional meter பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். As per Solar Rooftop Net metering Policy, TNERC order dated 13.11.2013ன்படி "Solar PV capacity shall not exceed the service connection capacity for sanction load என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 இதன் பிறகு மின் நுகர்வோர் தன்னுடைய மின் இணைப்பு எண் 220-006-15 ல் எந்தவித அனுமதியின்றி சோலார் PV capacity யினை தன்னிச்சையாக இணைத்து வந்துள்ளதாகவும், அதே காலகட்டத்தில் தன்னுடைய மின் பளுக்களையும் வாரியத்திற்கும் எந்தவித தகவலும் தெரிவிக்காமல் கூடுதலாக இணைத்து வந்துள்ளதாகவும், TNERC Supply Code regulation 5 (2) (B) ன்படி Excess Demand (Import) மாற்றம் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**LOAD REGULARIZATION DETAILS OF THE SERVICE NO: 220-006-15 (Para-1)**

Service Number : 220-006-15
LT SC Effected: 13.06.2008 -1.0 KW
Solar SC Effected: 26.07.2019 -1.85 KW
07.01.2023 --1.85 KW + 28.0 KW-29.85 KW

| Sl. No | Date of Load Regularized | Load Regularized Details | Collection Details | | | | | | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | RF | CCD | MCD | DEV | SCD | TF | |
| (1) | (2) | (3) | (4) | | | | | | (5) |
| 1 | 04.07.2015 | 1.0 kw to 1.85 kw | 50 | - | - | - | - | 75 | Load Regularized by |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | TANGEDCO |
| 2 | 02.07.2019 | 1.85 kw to 3.85 kw | 22000620 & 22000616 merged with 22000615 | | | | | | Merging of service as request by consumer |
| 3 | 18.01.2020 | 3.85 kw to 13.0 kw | 100 | 600 | – | 10000 | – | 75 | Load Regularized by TANGEDCO |
| 4 | 17.07.2020 | 13.0 KW TO 14.0 KW | 100 | 600 | – | 1000 | – | 75 | Load Regularized by TANGEDCO |
| 5 | 12.11.2020 | 14.0 KW TO 18.0 KW | 100 | 2400 | – | 4000 | – | 75 | Load Regularized by TANGEDCO |
| 6 | 05.08.2022 | 18.0 KW TO 30.0 KW | 100 | 7200 | 200 | 12000 | – | 75 | Additional Load by Consumer |

6.7 மின் இணைப்பு எண் 220–006–15 ஆனது கடந்த 01.01.2000 அன்று 1.0kw ஆக வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த மின் இணைப்பில் எந்த வித விண்ணப்பமும் அளிக்காமல், பெறப்பட்ட மின் பளு 1.0 kw விட கூடுதலாக 1.85 kw வரை மின்பளு பயன்படுத்தியதால் கடந்த 04.07.2015 அன்று 1.85 kw ஆக மின் வாரியத்தால் Load Regularization செய்யப்பட்டுள்ளதாகவும். மின் இணைப்பு எண்.220–006–16 ன் மின் பளுவானது 1.0 kW மற்றும் மின் இணைப்பு எண் 220–006–20 ன் மின் பளுவானது 1.0 kw ஆகும். இந்த இரண்டு மின் இணைப்புகளும் மனுதாரரின் விண்ணபத்தின் பேரில் மின் இணைப்பு எண்220–006–15 –ல் ஏற்கனவே இருந்த 1.85 கி வாட்ஸ் மின் பளுவுடன் இணைத்து 3.85 கி வாட்ஸ் ஆக 02.07.2019 அன்று ஒரே மின் இணைப்பாக (Merging of Services) மாற்றம் செய்யப்பட்டதாகவும், மின் இணைப்பு எண் 220–006–15ல் மனுதாரர் அனுமதி பெற்ற தாழ்வழுத்த மின் பளு 3.85 kw விட எந்த வித விண்ணப்பமும் அளிக்காமல் கூடுதலாக 13.0 kw வரை மின் பளு பயன்படுத்தியதால் கடந்த 18.01.2020 அன்று 13 kw ஆக மின் வாரியத்தால் Load Regularization செய்யப்பட்டுள்ளதாகவும், மீண்டும் மனுதாரர் மின் இணைப்பு எண் 220–006–15ல் அனுமதி பெற்ற தாழ்வழுத்த மின் பளு 13.0 kw விட எந்த வித விண்ணப்பமும் அளிக்காமல் கூடுதலாக 14.0 kw வரை பயன்படுத்தியதால் கடந்த 17.07.2020 அன்று 14 kw ஆக மின் வாரியத்தால் load Regularization செய்யப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து மின் இணைப்பு எண் 220–006–15ல் அனுமதி பெற்ற தாழ்வழுத்த மின் பளு 14.0 kw விட எந்த வித விண்ணப்பமும்

அளிக்காமல் கூடுதலாக 18.0 kw வரை பயன்படுத்தியதால் கடந்த 12.11.2020 அன்று 18 kw ஆக மின் வாரியத்தால் Load Regularization செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் கடந்த 05.08.2022 அன்று மனுதாரர் 18.0kw ல் இருந்து 30.0 kw ற்கு கூடுதல் மின் பளுவிற்கு விண்ணப்பித்ததால் உரிய அனுமதியுடன் கூடுதல் மின் பளுவானது வழங்கப்பட்டதாகவும், மனுதாரர் உரிய முறையில் விண்ணப்பம் அளித்து கூடுதல் மின் பளுவை பெற தவறியதால் கூடுதலாக பயன்படுத்திய மின் பளுவானது மின் வாரியத்தாலேயே முறைப்படுத்தப்பட்டு (Load Regularised) அதற்குரிய கட்டணம் மட்டுமே மனுதாரரிடமிருந்து வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேல்முறையீட்டாளர் TNERC Supply Code regulation 5 (2) (B) ன்படி அவரது Load Regularize செய்வதற்காக வசூல் செய்யப்பட்ட Development Charges மற்றும் Testing Fees ஐ தன்னால் அனுமதியின்றி இணைக்கப்பட்ட Solar PV Capacity யை வரைமுறைப்படுத்த மின் வாரியம் தன்னிடம் இருந்து வசூலித்ததாக தவறான புரிதலுடன் இந்த மேல் முறையீட்டு மனுவை சமர்பித்துள்ளதாகவும், TNERC Supply Code regulation 5 (2) (B) என்பது நுகர்வோரின் கூடுதல் மின் பளுக்களை (Excess Demand) யை வரைமுறைபடுத்த வழி செய்யும் விதியாகும் எனவும் கூடுதல் சோலார் மின் பளுக்களை (Excess PV Capacity) TNERC Supply Code regulation 5 (2) (B) விதிகளின்படி வரைமுறைப்படுத்த இயலாது என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 கூடுதல் சோலார் மின் பளுக்களை நுகர்வோர் முறைப்படியான விண்ணப்பம் அளித்தால் மட்டுமே விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்க இயலும் எனவும் கூடுதல் சோலார் மின் பளுக்களை வரைமுறைபடுத்த 27.06.2022 வரையில் எந்தவித விண்ணப்பமும் மேல்முறையீட்டாளரிடமிருந்து வாரியத்தால் பெறப்படவில்லை என்றும், மேல்முறையீட்டாளரும் அதற்கான ஆதாரங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 27.06.2022 ல் சமர்ப்பிக்கப்பட்ட கூடுதல் சோலார் மின் பளுவிற்கான விண்ணப்பம் (2200622414 dt.27.06.2022) கீழ்க்கண்ட குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், 27.06.2022 ல் அனுமதிக்கப்பட்ட மின் பளு 18.0 KW ஆகும் என்றும், அனுமதிக்கப்பட்ட சோலார் மின் பளு 1.85 KW ஆகும் எனவும் மேல்முறையீட்டாளர் கூடுதல் சோலார் மின் பளுவாக 18.0 KW (18.0 KW + 1.85 KW =

19.85 KW) க்கு விண்ணப்பம் செய்து இருந்ததாகவும், மொத்த Solar PV Capacity (19.85 KW) அந்த மின் இணைப்பின் sanctioned Load விட அதிகமாக இருந்ததால் உதவி பொறியாளர்/ நகர்/ பேருந்து நிலையம் திண்டுக்கல் அவர்களால் விண்ணப்பத்தினை ரத்து செய்ய பரிந்துரை செய்யப்பட்டு செயற் பொறியாளர் / வடக்கு / திண்டுக்கல் அவர்களால் ரத்து செய்யப்பட்டதாகவும், அதன்பின் மனுதாரர் தன்னுடைய மின் இணைப்பு 220-006-15 ல் கூடுதல் மின் பளு 12.0 KW (Exg Load 18.0 KW + 12.0 KW = 30.0 KW) அளவிற்கு வேண்டி விண்ணப்பம் செய்து (2200722575 dt. 26.07.2022) அதற்கான அனுமதி 05.08.2022 அன்று வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 மின் இணைப்பு எண் 220- 006-15 ல் அனுமதிக்கப்பட்ட மின் பளுவினை 30.0 kw அளவிற்கு உயர்த்திய பின்பு மின் நுகர்வோர் தனது சோலார் pv capacity யை 28.0 KW (Exg 1.85 KW + 28.0 KW = 29.85 KW) உயர்த்துமாறு விண்ணப்பம் (22012220875 dt. 13.12.2022) அளித்து அதனடிப்படையில் கூடுதல் சோலார் PV Capacity வைத்துக் கொள்ள அனுமதி 09.01.2023 அன்று வழங்கப்பட்டதாகவும், மனுதாரருக்கு அனுமதி வழங்கிய 09.01.2023 க்கு முன்பு வரை அவர் கூடுதல் சோலார் பேனல்களை அனுமதியின்றி பயன்படுத்தியது சோலார் மின் பளு பெறும் பொழுது அளித்த ஒப்பந்த விதிகளுக்கு எதிரானது மற்றும் மனுதாரரது செயலானது CEIG and IE Rules 1956 ன்படியும் TNERC (GISS) 2021 Regulation 15.13 ன்படியும் விதிகளை மீறிய செயலாக கருதப்படுகின்றது என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 மின் இணைப்பு எண் 220-006-15 ஆனது கடந்த 26.07.2019ல் நெட் மீட்டரிங் ஆக மாற்றப்பட்டது 10 kw க்கும் அதிகமாக உள்ள சோலார் மின் பளுவிற்கு CEIG and IE Rules 1956 ன்படி Electrical Inspectorate லிருந்து Safety Certificate பெறப்பட்டு விண்ணப்பத்துடன் இணைத்து மின் வாரியத்தின் அனுமதியுடன் TNERC (GISS) 2021 Regulation 15.13 ன்படி உரிய அலுவலர்கள் முன்னிலையில் கூடுதல் சோலார் பேனல்களானது நிறுவப்பட வேண்டும் என்பது விதியாகும் ஆனால் மனுதாரர் 09.01.2023 அன்று வரையிலும் அனுமதிக்கப்பட்ட சோலார் பளுவினை விட கூடுதலாக (117 Nos x 270 W = 3.97 Kw) இணைத்து விதிமீறல் செய்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். As per the Hon'ble TNERC GISS Regulation and Order no.8 dt 22.10.2021,

Clause 11.4 General "For the purpose of billing the import, export and net energy, the units and other allied parameters recorded in the respective import and export and net register of the consumer bidirectional meter shall be reckoned respectively. The maximum demand recorded in the gross generation meter or inverter as the case may be shall not exceed the sanctioned / contracted plant capacity of GISS in any billing cycle. If the demand exceeds the sanctioned limit in any billing cycle, the quantum of exported units recorded in the bidirectional meter during the respective slots in case of gross metering and respective billing cycle in case of net metering and net billing, proportionate to the portion of demand that exceeded over the sanctioned limit, shall be treated as inadvertent Injection in to the grid and shall not be eligible for payment by the licensee"

6.13 மேல்முறையீட்டாளர் தான் வாரியத்திற்கு அளித்த மின்சாரத்திற்கு தனக்கு திடீரென 8.0 இலட்சம் ரூபாய் செலுத்த சொல்லி உத்தரவு எதற்காக என்றும். வாரியத்திற்கு நன்மை செய்த தன்னை நசுக்க பார்க்கின்றார்கள் என்றும் மின்சார வாரியத்தில் செயற் பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற மனுதாரர் வாரியத்திற்கு நன்மை தானே செய்கின்றோம் வாரியத்திற்கு செலவில்லாமல் மின்சாரம் உற்பத்தி செய்து தர போகிறோம். இதற்கு என்ன ஆட்சேபனை ஏற்பட போகின்றது என்று கூடுதல் பேனல்களை அமைத்ததாகவும் கூறியிருப்பதற்கு கீழ்க்கண்ட விளக்கம் அளிக்கப்படுவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.14 வாரியத்திற்கு மின்சாரம் உற்பத்தி செய்து வழங்குவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களின்படியே செயல்பட வேண்டும் எனவும், மனுதாரர் அவர்கள் மின்சார வாரியத்தில் செயற் பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவராக இருப்பினும் மின் வாரிய விதிமுறைகளுக்கு கடமைபட்டவர் எனவும், வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு முரணாக எவ்வித அனுமதியும் இன்றி உற்பத்தி செய்யப்படும் அனைத்து மின்சாரத்தையும் inadvertent injection ஆக கருதப்பட்டு அதற்கு மின் பகிர்மான உரிமைதாரர் கட்டணம் தர வேண்டிய அவசியம் இல்லை என Hon'ble TNERC GISS Regulation and Order no.8 dt 22.10.2021, Clause 11.4 General ல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**IMPORT & EXPORT DETAILS OF SERVICE NO 220-006-15**

SC No : 220-000-15

Solar Load : 1.85 KW

Tariff : V–Commercial

| Billing Month | Export units | Eligible Export Units | Unauthorized injection Units | Import units | To be Billed Units | Already Billed Units | To be Billed CC Charges | Already Billed CC Charges | Balance To be collected |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4)<br>(2) – (3) | (5) | (6)<br>(5) – (3) | (7) | (8) | (9) | (10) |
| 13.09.2019 | 5236 | 555 | 4681 | 626.7 | 71.7 | 1.7 | 2926 | 597 | 2329 |
| 14.11.2019 | 4000 | 555 | 3445 | 916 | 361 | 0 | 5641 | 1072 | 4569 |
| 14.01.2020 | 2357 | 555 | 1802 | 9021 | 8466 | 0 | 74170 | 7187 | 66983 |
| 16.03.2020 | 5531 | 555 | 4976 | 7970 | 7415 | 1408 | 65293 | 14461 | 50832 |
| 15.05.2020 | 8250 | 555 | 7695 | 7945 | 7390 | 0 | 65075 | 1911 | 63164 |
| 15.07.2020 | 6380 | 555 | 5825 | 6677 | 6122 | 0 | 54364 | 2474 | 51890 |
| 18.09.2020 | 6239 | 555 | 5684 | 7419 | 6864 | 1172 | 60664 | 14443 | 46221 |
| 10.11.2020 | 5735 | 555 | 5180 | 7644 | 7089 | 1909 | 62545 | 18836 | 43709 |
| 08.01.2021 | 3867 | 555 | 3312 | 9539 | 8984 | 5672 | 78548 | 50510 | 28038 |
| 12.03.2021 | 4801 | 555 | 4246 | 7958 | 7403 | 3157 | 65192 | 29303 | 35889 |
| 10.05.2021 | 6505 | 555 | 5950 | 8299 | 7744 | 1794 | 68102 | 17810 | 50292 |
| 13.07.2021 | 8281 | 555 | 7726 | 8099 | 7544 | 0 | 66377 | 2611 | 63766 |
| 13.09.2021 | 6309 | 555 | 5754 | 8794 | 8239 | 2485 | 72237 | 23601 | 48636 |
| 12.11.2021 | 5117 | 555 | 4562 | 8130 | 7575 | 3013 | 66625 | 28064 | 38561 |
| 12.01.2022 | 3938 | 555 | 3383 | 8205 | 7650 | 4267 | 67259 | 38664 | 28595 |
| 11.03.2022 | 7510 | 555 | 6955 | 7548 | 6993 | 38 | 70165 | 2804 | 67361 |
| **Total** | **90056** | **8880** | **81176** | **114790.7** | **105910.7** | **24916.7** | **945183** | **254348** | **690835** |

6.15 எனவே மனுதாரருக்கு அனுமதிக்கப்பட்ட சோலார் பளு 1.85 kw ன்படி தகுதியான யூனிட்களானது மாதத்திற்கு 555 யூனிட்கள் ஆகும் என்றும், மனுதாரர் 09/2019 முதல் 05/2022 வரையிலான காலகட்டத்தில் அனுமதிக்கப்பட்ட சோலார் மின் பளுவினை விட கூடுதல் சோலார் பேனல்களை முறையான அனுமதியின்றி இணைத்து (Unauthorized injection units) 81176 யூனிட்களை வாரிய விதிகளை மீறியதால் பலன் அடைந்துள்ளதாகவும், எந்த மின்பளுவாக இருந்தாலும் கூட்டுவதற்கோ மற்றும் குறைப்பதற்கோ வாரிய அனுமதி பெறாமல் தன்னிச்சையாக பயன்படுத்துவது வாரிய ஒப்பந்தத்தை மீறிய செயலாகும் எனவும், எனவே மனுதாரர் சோலார் மின் இணைப்பு பெறும் பொழுது அளித்த உத்திரவாதத்தின் அடிப்படையில் மின் இணைப்பினை பயன்படுத்தாமல் மேற்படி மின் இணைப்பில் கூடுதலாக சோலார் பேனல்களை அனுமதியின்றி இணைத்து பயன்படுத்தி மின் வாரியத்திற்கு ரூபாய்.690835.00 (ஆறு இலட்சத்து தொண்ணூறாயிரத்து எண்ணூற்று முப்பத்தைந்து மட்டும்) வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளதாகவும், மேற்கண்ட மின் கட்டண இழப்பீடானது மனுதாரர் முறையான அனுமதி பெறாமல் பயன்படுத்தியதால் ஏற்பட்ட வருவாய் இழப்பீடு ஆகும் என்றும்,

மேலும் இழப்பீட்டு தொகையினை மின்சார வாரியத்திற்கு செலுத்துவதற்கு மனுதாரர் கடமைப்பட்டவர் ஆவார் என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**LOAD DETAILS OF THE SERVICE No 220-006-760**

Service Number : 220-006-760

LT SC Effected : 27.11.2003 - 2.63 KW

Solar SC Effected : 11/01/2018 - 2.0 KW

| Sl.No. | Date of Load Regularized | Load Regularized Details | Collection Details | | | | | | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | RF | CCD | MCD | DEV | SCD | TF | |
| (1) | (2) | (3) | (4) | | | | | | (5) |
| 1 | 29.08.2019 | 2.63KW to 5.0 KW | 50 | - | - | - | - | 75 | Load Regularized by TANGEDCO |
| 2 | 14.01.2020 | 5.0 KW to 2.0 KW | 50 | - | - | - | - | 75 | Reduction of Load by consumer |
| 3 | 11/09/2020 | 2.0 KW to 3.0 KW | 100 | - | - | 1000 | - | 75 | Load Regularized by TANGEDCO |

6.16 மின் இணைப்பு எண் 220-006-760 ஆனது கடந்த 27.11.2003 அன்று 2.63 KW ஆக வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த மின் இணைப்பில் எந்த வித விண்ணப்பமும் அளிக்காமல் பெறப்பட்ட மின்பளு 2.63 kW விட, கூடுதலாக 5 kW வரை மின் பளு பயன்படுத்தியதால் கடந்த 29.08.2019 அன்று மின் வாரியத்தால் 5.00kW ஆக Load Regularization செய்யப்பட்டுள்ளதாகவும், மின் இணைப்பு எண் 220-006-760-ல் 14.01.2020 அன்று மனுதாரர் விண்ணபத்தின் பேரில் 5.0 kw லிருந்து 2.0 kw ஆக மின்பளு குறைக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் மீண்டும் இந்த மின் இணைப்பில் எந்த வித விண்ணப்பமும் அளிக்காமல் பெறப்பட்ட மின் பளு 2.0 kW விட கூடுதலாக 3.0 KW வரை மின் பளு பயன்படுத்தியதால் கடந்த 11.09.2020 அன்று 3.00 KW ஆக மின் வாரியத்தால் Load Regularization செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் உரிய முறையில் விண்ணப்பம் அளித்து கூடுதல் மின் பளுவை பெற தவறியதால், கூடுதலாக பயன்படுத்திய மின் பளுவானது மின் வாரியத்தாலேயே முறைப்படுத்தப்பட்டு (Load Regularized) அதற்குரிய கட்டணம் மட்டுமே மனுதாரரிடமிருந்து வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**IMPORT & EXPORT DETAILS OF SERVICE NO 220-006-760**

SC NO. : 220-006-760

Solar Load : 2.0 KW

Tariff : V- Commercial

| Billing Month | Export units | Eligible Export Units | Unauthorized injection Units | Import units | To be Billed Units | Already Billed Units | To be Billed CC Charges | Already Billed CC Charges | Balance To be collected |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| (1) | (2) | (3) | (4)<br>(2) – (3) | (5) | (6)<br>(5) – (3) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09.03.2016 | 670 | 600 | 70 | 920 | 320 | 110 | 3139 | 1311 | 1828 |
| 09.03.2018 | 1050 | 600 | 450 | 710 | 110 | 0 | 1364 | 434 | 930 |
| 09.07.2018 | 920 | 600 | 320 | 1000 | 400 | 80 | 7719 | 861 | 6858 |
| 12.09.2018 | 960 | 600 | 60 | 1300 | 700 | 340 | 6358 | 3315 | 3043 |
| 12.11.2018 | 660 | 600 | 60 | 950 | 350 | 290 | 3439 | 2976 | 463 |
| 16.01.2019 | 660 | 600 | 60 | 740 | 140 | 80 | 1617 | 854 | 763 |
| 15.03.2019 | 690 | 600 | 90 | 980 | 380 | 290 | 3646 | 2885 | 761 |
| 16.05.2019 | 1013 | 600 | 413 | 992 | 392 | 0 | 3747 | 434 | 3313 |
| 17.07.2019 | 990 | 600 | 390 | 774 | 174 | 0 | 1912 | 503 | 1409 |
| 10.05.2021 | 676 | 600 | 76 | 930 | 350 | 48 | 3216 | 679 | 2537 |
| **Total** | **8289** | **6000** | **1989** | **9296** | **3316** | **1238** | **36157** | **14252** | **21905** |

6.17 எனவே மனுதாரருக்கு அனுமதிக்கப்பட்ட சோலார் பளு 2.00 kW ன்படி தகுதியான யூனிட்களானது மாதத்திற்கு 600 யூனிட்கள் ஆகும் எனவும், மனுதாரருக்கு 03/2018 முதல் 05/2021 வரையிலான காலகட்டத்தில் ELIGIBLE EXPORT UNITS 6000 ஐ (600*10=6000) விட உற்பத்தி செய்த மின்சாரத்தில் கூடுதலாக கழித்து கொடுக்கப்பட்ட 2078 யூனிட்களுக்குரிய (3316– 1238=2078) தொகை ரூ.21905/– (36157–14252–21905) (இருபத்தி ஒரு ஆயிரத்தி தொள்ளாயிரத்தி ஐந்து ரூபாய் மட்டும் ) மின்வாரியத்திற்க்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்யும் பொருட்டே கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட மின் கட்டண இழப்பீடானது மனுதாரர் முறையான அனுமதி பெறாமல் பயன்படுத்தியதால் ஏற்பட்ட வருவாய் இழப்பீடு ஆகும் என்றும், எனவே மேற்கண்ட இழப்பீட்டு தொகையினை மின்சார வாரியத்திற்கு செலுத்துவதற்கு மனுதாரர் கடமைப்பட்டவர் ஆவார் என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**LOAD DETAILS OF THE SERVICE No 220–006–952**

Service Number: 220–006–952

LT SC Effected: 30.09.2011 – 120 W

Solar SC Effected : 06.07.2015 –3.0 KW

| Sl.No. | Date of Load Regularized | Load Regularized Details | Collection Details | | | | | | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | RF | CCD | MCD | DEV | SCD | TF | |
| (1) | (2) | (3) | (4) | | | | | | (5) |
| 1 | 14.02.2015 | 0.120 KW to 3.92 KW | 50 | 2400 | 2500 | 2400 | 500 | 75 | Load Regularized by TANGEDCO |
| 2 | 04.07.2015 | 3.92 KW to 5.1 KW | 50 | 1200 | – | 400 | – | 75 | Load Regularized by TANGEDCO |
| 3 | 19.03.2016 | 5.1 KW to 6.16 KW | 50 | 1200 | – | 400 | – | 75 | Load Regularized by TANGEDCO |
| 4 | 22.06.2018 | 6.16 KW to 7.39 KW | 50 | 1200 | – | 400 | – | 75 | Load Regularized by TANGEDCO |
| 5 | 28.09.2018 | 7.39 KW to 9.0 KW | 50 | 600 | – | 200 | – | 75 | Load Regularized by TANGEDCO |
| 6 | 15.05.2019 | 9.0 KW to 10.0 | 50 | 600 | – | 200 | – | 75 | Load Regularized by |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | KW | | | | | | | TANGEDCO |
| 7 | 125.07.2021 | 10.0 KW to 15.0 KW | 100 | 3000 | – | 500 | – | 75 | Load Regularized by TANGEDCO |

6.18 மின் இணைப்பு எண் 220-006-952 ஆனது கடந்த 30.09.2011 அன்று 0.12 KW ஆக வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த மின் இணைப்பில் எந்த வித விண்ணப்பமும் அளிக்காமல் பெறப்பட்ட மின்பளு 0.12kW விட கூடுதலாக 3.92KW வரை மின் பளு பயன்படுத்தியதால் கடந்த 14.02.2015 அன்று 3.92KW ஆக மின் வாரியத்தால் Load Regularization செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த மின் இணைப்பில் மீண்டும் எந்த வித விண்ணப்பமும் அளிக்காமல் 6.16 kw மின் பளுவிலிருந்து கூடுதலாக 7.39 kw வரை மின் பளு பயன்படுத்தியதால் கடந்த 22.06.2018 அன்று 7.39KW ஆக மின் வாரியத்தால் Load Regularization செய்யப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து இந்த மின் இணைப்பில் மீண்டும் எந்த வித விண்ணப்பமும் அளிக்காமல் 7.39KW மின் பளுவிலிருந்து கூடுதலாக 9 kw வரை மின் பளு பயன்படுத்தியதால் கடந்த 28.09.2018 அன்று 9 KW ஆக மின் வாரியத்தால் Load Regularization செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த மின் இணைப்பில் மீண்டும் எந்த வித விண்ணப்பமும் அளிக்காமல் 9 KW மின் பளுவிலிருந்து கூடுதலாக 10 KW வரை மின் பளு பயன்படுத்தியதால் கடந்த 15.05.2019 அன்று 10 KW ஆக மின் வாரியத்தால் Load Regularization செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த மின் இணைப்பில் மீண்டும் எந்த வித விண்ணப்பமும் அளிக்காமல் 10KW மின் பளுவிலிருந்து கூடுதலாக 15 KW வரை மின் பளு பயன்படுத்தியதால் கடந்த 12.07.2021 அன்று 15 KW ஆக மின் வாரியத்தால் Load Regularization செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் உரிய முறையில் விண்ணப்பம் அளித்து கூடுதல் மின் பளுவை பெற தவறியதால் கூடுதலாக பயன்படுத்திய மின்பளுவானது மின் வாரியத்தாலேயே முறைப்படுத்தப்பட்டு (Load Regularized) அதற்குரிய கட்டணம் மட்டுமே மனுதாரரிடமிருந்து வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**<u>IMPORT & EXPORT DETAILS OF SERVICE No 220-006-952</u>**

SC NO : 220-006-952

Solar Load : 3.0 KW

Tariff : V Commercial

| Billing Month | Export units | Eligible Export Units | Unauthorized injection Units | Import units | To be Billed Units | Already Billed Units | To be Billed CC Charges | Already Billed CC Charges | Balance To be collected |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4)<br>(2) – (3) | (5) | (6)<br>(5) – (3) | (7) | (8) | (9) | (10)<br>(8) – (9) |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09.03.2018 | 1510 | 900 | 610 | 1080 | 180 | 0 | 3663 | 1021 | 2642 |
| 09.05.2018 | 1360 | 900 | 460 | 1310 | 410 | 0 | 5622 | 1247 | 4375 |
| 09.07.2018 | 1350 | 900 | 450 | 1510 | 610 | 0 | 7319 | 1305 | 6014 |
| 12.09.2018 | 1100 | 900 | 200 | 2170 | 1270 | 1070 | 12898 | 10402 | 2496 |
| 13.05.2019 | 2283 | 900 | 1383 | 2275 | 1375 | 0 | 13792 | 1512 | 12280 |
| 12.07.2019 | 6337 | 900 | 5437 | 2535 | 1635 | 0 | 15997 | 1681 | 14316 |
| 14.09.2019 | 1971 | 900 | 1071 | 2393 | 1493 | 422 | 14776 | 5023 | 9753 |
| 14.11.2019 | 1820 | 900 | 920 | 1495 | 595 | 0 | 7192 | 1463 | 5729 |
| 08.09.2020 | 1111 | 900 | 211 | 1024 | 124 | 0 | 3197 | 1449 | 1748 |
| 10.11.2020 | 996 | 900 | 96 | 1450 | 550 | 454 | 6805 | 4558 | 2247 |
| 10.05.2021 | 1110 | 900 | 210 | 1336 | 436 | 226 | 5834 | 3359 | 2475 |
| 09.09.2021 | 905 | 900 | 5 | 1425 | 525 | 520 | 6601 | 6558 | 43 |
| 11.03.2022 | 1231 | 900 | 331 | 1363 | 463 | 132 | 6070 | 3272 | 2798 |
| **Total** | **23084** | **11700** | **11384** | **21366** | **9666** | **2824** | **109766** | **42850** | **66916** |

6.19 எனவே மனுதாரருக்கு அனுமதிக்கப்பட்ட சோலார் பளு 3.0 kW ன்படி தகுதியான யூனிட்களானது மாதத்திற்கு 900 யூனிட்கள் ஆகும் என்றும் மனுதாரருக்கு 03/2018 முதல் 03/2022 வரையிலான காலகட்டத்தில் ELIGIBLE EXPORT UNITS 11700 (900*13=11700) ஐ விட உற்பத்தி செய்த மின்சாரத்தில் கூடுதலாக கழித்து கொடுக்கப்பட்ட 6842 யூனிட்களுக்குரிய (9666–2824=6842) தொகை ரூ.66916 /- (109766–42850=66916) (அறுபத்தி ஆறாயிரத்தி தொள்ளாயிரத்தி பதினாறு ரூபாய் மட்டும்) மின்வாரியத்திற்க்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்யும் பொருட்டே கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட மின் கட்டண இழப்பீடானது மனுதாரர் முறையான அனுமதி பெறாமல் பயன்படுத்தியதால் ஏற்பட்ட வருவாய் இழப்பீடு ஆகும் என்றும், எனவே மேற்கண்ட இழப்பீட்டு தொகையினை மின்சார வாரியத்திற்கு செலுத்துவதற்கு மனுதாரர் கடமைப்பட்டவர் ஆவார் என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.20 மனுதாரர் செலுத்தியுள்ள Development charges மற்றும் Testing Fees கட்டணங்களானது தாழ்வழுத்த மின் இணைப்பில் மனுதாரரால் மின் வாரியத்திலிருந்து பெறப்பட்டு பயன்படுத்தியதை முறைபடுத்த வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் மட்டுமே ஆகும் என்றும், இந்த கட்டணத்திற்கும் உரிய அனுமதியின்றி சோலார் மின் இணைப்பில் கூடுதல் பேனல்களை இணைத்து ELIGIBLE UNITS க்கு அதிகமாக கழித்து கொடுக்கப்பட்டு மின் வாரியத்திற்கு ஏற்பட்ட வருவாய் இழப்பிற்காக மட்டுமே அளிக்கப்பட்ட அறிவிப்பு கடிதத்திற்கும் (Bill Revision) சம்மந்தம் இல்லை மனுதாரர் மேற்கண்ட கட்டணங்களை சோலார் மின் பளுவினை வரை முறை படுத்துவதற்கான

கட்டணம் என தவறாக புரிந்து கொண்டு இந்த மனுவினை அளித்துள்ளதாகவே கருதவேண்டியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.21 CGRF விசாரணையானது கடந்த 03.09.2022 மற்றும் 24.11.2022 இரு தினங்களில் முறையாக விரிவாக நடத்தப்பட்டு மனுதாரருக்கு உரிய முறையில் விளக்கப்பட்டு பின்னர் 01.03.2024 அன்று தீர்ப்புரையானது அளிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் மின் இணைப்பு எண் 220-006- 15, 220-006-760, 220-006-952 ல் அனுமதிக்கப்பட்ட சோலார் மின் பளுவினை விட கூடுதல் சோலார் பேனல்களை உரிய அனுமதியின்றி இணைத்து Eligible Units விட அதிகமாக பலன்களை அனுபவித்து விட்டு தற்போது தனது தவறை நியாயப்படுத்தும் விதமாக உண்மைக்கு புறம்பான பல குற்றச்சாட்டுகளை மனுவில் தெரிவித்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.22 கூடுதல் பேனல்கள் அமைக்க விண்ணப்பித்ததாக கூறுவதும் பிரிவு அலுவலரிடம் விண்ணப்பம் அளித்ததாக கூறுவதற்கும் எவ்வித ஆதாரமும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் மேலும் வணிக மின் இணைப்புகளில் கூடுதல் சோலார் மின் பளுவை இணைப்பதற்கான வழிவகைகள் இல்லாததால், மின் இணைப்புகளில் மின் வாரியத்தின் அனுமதி பெறாமல் சோலார் பேனல்களை இணைத்துள்ளது மனுதாரரது மனுவிலிருந்து தெளிவாக தெரிய வருகின்றதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.23 மனுதாரர் செலுத்தியுள்ள Development charges மற்றும் Testing Fees கட்டணங்களானது தாழ்வழுத்த மின் இணைப்பில் மனுதாரரால் மின் வாரியத்திலிருந்து பெறப்பட்டு (IMPORT MD) பயன்படுத்திய கூடுதல் பளுவினை முறைபடுத்த வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் ஆகும் என்றும், இதை சோலார் மின் பளுவினை (EXPORT MD) வரை முறை படுத்துவதற்கான கட்டணம் என மனுதாரர் தவறாக புரிந்து கொண்டு இதையே திரும்பவும் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

6.24 GISS சோலார் விதிகளின்படி மனுதாரரது மின் இணைப்புகளுக்குரிய Eligible Unit களானது கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்படுகின்றது (PV CAPACITY X CUF (21 % ) X 24 X NO OF DAYS IN BILLING CYCLE).

220-006-15 – 555 யூனிட்கள்

220-006-760 – 600 யூனிட்கள்

220-006-952 – 900 யூனிட்கள்

மேற்கண்ட மின் இணைப்புகளுக்குரிய Eligible Unit களை விட ஏற்கனவே கூடுதலாக கழித்து கொடுக்கப்பட்ட யூனிட்களுக்கு மட்டுமே உரிய தொகை செலுத்துமாறு மனுதாரருக்கு அறிவிப்பு கடிதமானது வழங்கப்பட்டது என்றும் வேறு எந்தவிதமான அபராதமும் விதிக்கப்படவில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.25 மனுதாரர் சோலார் மின் இணைப்புகளில் 10 KW அதிகமான கூடுதல் மின் பளுவிற்க்கு CEIG and IE Rules 1956ன்படி Electrical Inspector லிருந்து Safety certificate பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்து சோலார் பேனல்களை மின் வாரிய அலுவலர்கள் முன்னிலையில் இணைக்கப்பட வேண்டும் என்பது விதிகளாகும் என்றும் மனுதாரர் மேற்கண்ட சோலார் மின் இணைப்புகளில் உரிய அனுமதி பெறாமல் கூடுதல் சோலார் மின் பளுவினை இணைத்து அனுமதிக்கப்பட்ட மின் பயனீட்டளவினை விட (Eligible Export units) கூடுதலாக Export units களை கழித்து அதன் பலன்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது தெரிகிறது என்றும் அதனை கண்டறிந்த உடன் Eligible Export units விட அதிகமாக கழித்து கொடுக்கப்பட்ட யூனிட்களுக்கு உண்டான தொகையை மட்டுமே செலுத்துமாறு மனுதாரரிடம் கேட்டு கொள்ளப்பட்டதாகவும் மனுதாரர் தெரிவித்து இருப்பது போல் தான் கூடுதலாக உற்பத்தி செய்த அனைத்து யூனிட்களுக்கும் உண்டான தொகையை செலுத்துமாறு தெரிவிக்கப்படவில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.26 மனுதாரர் அவர்கள் ரூ.700/- சேர்த்து வாங்கினார்கள் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளது அந்த தொகையை கணினியில் ஆய்வு செய்ததில் மின் இணைப்பு எண்.220-006-952 க்கு MD PENALTY (FROM 10.0 KW TO 15.0 KW) ஆனதிற்கு FIXED CHARGES DIFFERENCE (5.0 KW * RS.140=Rs.700/-) 13.07.2021 அன்று வசூல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகின்றது எனவும், எனவே Eligible units விட கூடுதலாக கழித்து கொடுக்கப்பட்ட தொகையான ரூபாய் 779656.00 (ஏழு இலட்சத்து எழுபத்தி ஒன்பதாயிரத்து அறுநூற்று ஐம்பத்தாறு ரூபாய் மட்டும்) செலுத்துமாறு

கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், எனவே மேற்கண்ட தொகையை செலுத்த மனுதாரர் கடமைப்பட்டவர் ஆவார் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய பெயரில் 220-006-15, 220-006-760 மற்றும் 220-006-952 ஆகிய மூன்று நெட் மீட்டரிங் (Net metering) சர்வீஸ்கள் உள்ளதாகவும், உதவி பொறியாளர் அவர்களின் கடிதத்தின்படி தன்னுடைய மூன்று நெட் மீட்டரிங் சர்வீஸ்களிலும் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக சோலார் பேனல்கள் நிறுவியுள்ளதாகவும், எனவே கடிதத்தில் குறிப்பிடப்பட்ட தொகையை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும், எந்த அடிப்படையில் eligible units தீர்மானிக்கப்பட்டது என தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

7.3 மின் இணைப்பு எண் 220-006-15, 12.07.2019-இல் நெட் மீட்டரிங் சர்வீஸாக மாற்றப்பட்டதாகவும், அந்த சர்வீஸில் சோலார் பேனல்களை அதிகப்படுத்த விரும்பி (capacity addition to existing solar panels) உதவி பொறியாளரிடம் விண்ணப்பம் கொடுத்த போது commercial சர்வீஸ்களில் solar panel capacity-ஐ அதிகப்படுத்த கணினியில் வழிவகை இல்லை என திருப்பி தரப்பட்டதாகவும், செயற்பொறியாளரிடம் கேட்ட போது சென்னை அலுவலகத்திலிருந்துதான் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டதாகவும், எனவே வேறு வாய்ப்பில்லாமல் போகவே நெட் மீட்டரிங் சர்வீஸில் எல்லா Import மற்றும் Export விபரங்கள் பதிவாகிறதால் சோலார் பேனல்களின் அளவை அதிகரித்துவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய சோலார் மின் இணைப்புகளில் அனுமதிக்கப்பட்ட சோலார் மின்பளுவினைவிட கூடுதல் சோலார் பேனல்களை முறையான அனுமதியின்றி இணைத்து தன்னிச்சையாக பயன்படுத்தி வந்ததால் வாரியத்திற்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளதாகவும், எனவே அந்த இழப்பீட்டு தொகையை செலுத்த அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

7.5 இருதரப்பு வாதங்களையும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும் ஆராயும்போது கீழ்கண்டவைகள் இவ்வழக்கை ஒட்டிய வழக்கெழு வினாக்களாக எழுகின்றன.

1. பயன்பாட்டில் உள்ள ஒரு மின் இணைப்பில் மின் நுகர்வோர் சூரிய ஒளியால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தினை இணைப்பதற்கான உட்சபட்ச மின்பளு வரம்பு என்ன?

2. மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்புகளில் கூடுதலாக இணைக்கப்பட்ட மின்பளுவிற்கு விதிக்கப்பட்ட தொகையை ரத்து செய்யுமாறு கோரும் கோரிக்கை ஏற்புடையதுதானா?

**8.0 <u>வழக்கெழு வினா 1–ற்கான தீர்வு</u>:**

8.1 பயன்பாட்டில் உள்ள ஒரு மின் இணைப்பில் மின் நுகர்வோர் சூரிய ஒளியால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தினை இணைப்பதற்கான உட்சபட்ச மின்பளு வரம்பு குறித்து அறிய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் தொடர்ச்சியாக வெவ்வேறு காலகட்டத்தில் வழங்கப்பட்ட விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன். அவ்விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"(i)* ***Order No. 1 of 2013 dated 07.03.2013***
*Net metering*
*4.3.1 For Domestic Rooftop Solar generators, the consumer meters shall be replaced with suitable meter(s) for net metering. The meter/meters for net metering shall be installed by the distribution licensee at the cost of the consumer/generator. The TANGEDCO shall submit a detailed procedure covering the following issues within 30 days of issuance of this Order for implementation of net metering for domestic roof top Solar generators taking into account the CEA's regulation on Installation and Operation of Meters and get the same approved by the Commission:*
*a) Standards and location of meters*
*b) Tariff for excess generation/lapsed units*
*c) Period of power credit*
*d) Any other related issue.*

***(ii) Order No. 3 of 2013 dated 13.11.2013***

***2. Eligible consumers for Net-metering***
*2.1. The categories of consumers eligible for net-metering have been prescribed under Clause 15 and 22.1 of the Tamil Nadu Solar Energy Policy 2012. Such categories have not been defined in the Commission's regulations or orders. To give more clarity and for easy implementation, the categories of consumers covered under HT tariff II-A, HT tariff III, LT tariff I-A, LT tariff I-C, LT tariff II-A, LT tariff II-B (1) and LT tariff V as specified in the Commission's retail tariff order in force are considered to be the "Eligible Consumers" for the purpose of Net-metering. Both the*

*existing and new Solar rooftop/Solar systems which comply with this order are eligible for Net-metering.*

***6. Restrictions on grid penetration***

*6.1. At the local distribution level connectivity to rooftop solar/solar systems shall be restricted to 30% of the distribution transformer capacity on the basis of first come first served. The maximum cumulative capacity in the Distribution Licensee area shall be limited to the extent prescribed in the Tamil Nadu Solar Energy Policy 2012 and by the Renewal Purchase Obligation(RPO) specified in the Commission's Regulation on year to year basis.*

***(iii) Order No. 3 of 2019 dated 25-03-2019***

***1.0 Introduction***

*1.1 Commission issued a suo motu order on 'Issues related to Tamil Nadu Solar Energy Policy' vide Order No.1 of 2013 dt.07.03.2013 based on 'Tamil Nadu Solar Energy Policy 2012'. This order interalia covered issues related to solar purchase obligation to be met by various category of consumers, its enforcement mechanism, and net metering for domestic rooftop solar generators. In the said order, Commission directed Tamil Nadu Generation and Distribution Corporation (TANGEDCO) to submit a detailed procedure on net metering covering specified issues like standards and location of meters, tariff for excess generation/lapsed units, LT connectivity etc. and to obtain approval from the Commission. The procedure submitted by TANGEDCO was hosted in the Commission's website and stakeholders comments obtained. Considering the procedure submitted by TANGEDCO and the comments from stakeholders, Commission issued Order No.3 of 2013 dt.13.11.2013 on 'Order on LT connectivity and net metering in regard to Tamil Nadu Solar Energy Policy 2012'. The order covered eligibility of consumers under net metering, commercial arrangements, metering standards and location, LT connectivity, standards, operation and maintenance of Solar Power Generators (SPGs) etc.*

*1.2 TANGEDCO filed a petition seeking Commission's approval inter alia praying for a revised commercial settlement mechanism. The petition was taken on file vide M.P No.9 of 2017. TANGEDCO was directed to host the petition in the website and invite stakeholders comments. Meanwhile, the Government of Tamil Nadu issued a new Tamil Nadu Solar Policy 2019 with effect from 04.02.2019. Clause 8.1.2 of this Policy prescribes a Solar net feed-in mechanism for the consumer category. The revised accounting methodology proposed by TANGEDCO in M.P No.9 of 2017 is similar to the mechanism in the Solar Policy of 2019. Based on the petition of TANGEDCO, comments received from stakeholders, reply affidavit and hearings, Commission passed orders in M.P No.9 of 2017 on 25.03.2019 for implementing the new mechanism for Rooftop Solar Generation. Consequent to the orders passed in the above petition, Commission issues this order.*

***2.0 Applicability :***

*2.1 This order on new scheme of rooftop Solar generation, namely, Solar net feed in-consumer category is applicable to all new applicants from the Eligible consumer category notified in para 3.0 of this order. The date of effect of this order is 25.03.2019, the date of passing of order by the Commission in M.P No.9 of 2017.*

*2.2 The existing consumers under the net metering scheme shall continue to be governed by the provisions in the Order No.3 of 2013 dt.13.11.2013.*

***3.0 Eligible consumers:***
*3.1 Consumers under Low Tension category except Hut and Agricultural category of tariff.*

***4.0 Permissible maximum capacity for an eligible consumer:***
*4.1 The maximum capacity of solar rooftop generating plant that an eligible consumer can install shall be upto 100% of his sanctioned/contracted demand with the distribution licensee.*

***7.0 LT connectivity***
*7.1 The technical standards of connectivity shall be as specified in the CEA's(Technical Standards of Connectivity for the Distributed Generation Resources) Regulations 2013 and as amended from time to time.*

*7.2 The maximum capacity for interconnection with the grid at a specific voltage level shall be governed by the Supply/Distribution code as amended from time to time. The interconnecting voltage levels of distributed generating sources relevant to capacity range is as follows:*

| *Capacity* | *Connecting voltage* |
|---|---|
| *Upto 4 kW* | *240 V – single phase or 415 V Three phase at the option of the consumer* |
| *Above 4 kW and upto 112 kW* | *415 V- Three phase* |

***8.0 Restrictions on grid penetration:***
*8.1 At the local distribution level, connectivity to rooftop solar systems shall be restricted to 90% of the distribution transformer capacity on the basis of first come first served. The Distribution licensee shall update the status of cumulative rooftop solar capacity connected to each Distribution transformer in their website.*

***(iv) M.P.No.9 of 2017***
*9.5.4 The Tamil Nadu Solar Policy 2019 (Solar Policy 2019) has introduced a target of 9000 MW by 2023 of which 40% is earmarked for consumer category solar energy systems. The grid feed in mechanism prescribed by the Policy - Solar energy net feed-in (consumer category) in clause 8.1.2 of the Policy is as follows:*

- *In this category, solar energy is used for self consumption with surplus if any being exported to the grid.*

- *A bidirectional service connection energy meter will be installed by the Distribution licensee to record the imported and exported energy.*

- *The imported energy will be debited at the applicable consumer tariff while the exported energy is credited on the basis of a consumer solar energy tariff to be determined by TNERC. Consumer will pay the difference between the debit and credit amount.*

- *If the cumulative credit amount exceeds the debit amount during any billing cycle, the net credit is carried over to the next billing cycle. At the end of a 12 month*

*settlement period as may be determined by TNERC, the consumer will receive payment of net credit any available.*

- *For consumer category solar PV systems, the system capacity shall not exceed 100% of sanctioned load of the service connection*

*Maximum cumulative solar PV capacity at Distribution Transformer level to be reviewed and determined by TNERC from time to time to enable optimal solar energy penetration.*

*9.10.7 In view of the foregoing analysis, Commission finds merit in the plea of the licensee to change the method of accounting in net metering. The objective of the Solar Policy 2012 was that of grid parity. Rooftop Solar tariffs are moving towards grid parity. The proposal of TANGEDCO is also in tune with the Solar net feed in mechanism described in Clause 8.1.2 of revised Solar Policy 2019. Therefore, Commission accepts the request of the petitioner for change in the commercial settlement mechanism and the settlement period of 12 months incident with the financial year from April to March i.e from the 1st of April of the current year to the 31st of March of the succeeding year.*

***9.13 Issue No.V - Maximum capacity of rooftop solar installation in a service connection***

*9.13.1 The proposal of the petitioner seeks to remove the clause that fixes a cap of injection to the licensee's grid at 90% of the electricity consumption at the end of the settlement period and excess injection above the 90% cap to lapse as the revised accounting method is to purchase the energy exported at a price. As a consequence, a cap has been sought on the maximum installed capacity at 50% of contracted demand. Clause 13.1 of the Solar Policy 2019 stipulate that the system capacity at the service connection point shall not exceed 100% of the sanctioned/contracted demand of the service connection. Commission finds it appropriate to fix the system capacity limited to 100% of sanctioned load of the service connection rather than limiting the generation to 90% of consumption.*

***(v) M.P.No.32 of 2020***

***5.3.*** *Therefore, applications for installation of additional Solar PV capacity from consumers under the net meter scheme of Order No.3 of 2013 shall be processed as per the provisions of Order No.3 of 2013 dt.13.11.2013, provided the installed solar PV capacity does not exceed the sanctioned load of the service connection. As to the grid penetration limit, Commission decides to relax the restrictions of 30% limit on DT capacity in Order No.3 of 2013 for the reason that the Distribution Licensee will have difficulties in operating the two schemes of net meter and net feed-in with different restrictions on penetration in the same DT. Therefore, the first sentence of clause 6.1 in Order No.3 of 2013 dt.13.11.2013 under '6. Restrictions on grid penetration' is amended as follows:*

*"6.1. At the local distribution level connectivity to rooftop solar/solar systems shall berestricted to 90% of the distribution transformer capacity on the basis of first come first served."*

*Notification No. TNERC/GISS Regn.23-1 / Dated 07.10.2021, (Lr. No. TNERC/DD(L)F.Notitication/D.No. 708/2021)*

***7. Technical Requirements***

*7.3 The solar plant capacity shall not exceed the sanctioned load/contraced demand*

*7.4 The cumulative capacity of solar PV systems under net melering or net billing put together connecled to a distribution transformer, shall not exceed 90% of the distribution transformer capacity;"*

8.2 மேற்கூறிய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி 2013 மற்றும் 2019 காலகட்டத்திலிருந்தே நுகர்வோர் Net metering, Net feed in billing முறையில் சூரிய ஒளி மின் உற்பத்தி செய்யும் அலகுகள்(units) பயன்பாட்டில் உள்ள மின் இணைப்பின் ஒப்பந்த மின் தேவை வரை தான் இணைக்க முடியும் என்றும் மற்றும் அந்த மின் இணைப்புகளுக்கு மின் கட்டமைப்பில் உள்ள மின்மாற்றியிலிருந்து 90% வரை தான் அதன் கொள்ளளவில் இணைக்க முடியும் என்றும் தெளிவாக அறியமுடிகிறது.

9.0 <u>**வழக்கெழு வினா 2-ற்கான தீர்வு**</u>:

9.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்புகளில் எதிர்மனுதாரரால் inadvertent injection அதாவது திட்ட அனுமதியின்றி சூரிய ஒளி மூலம் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யப்பட்ட மின் அலகுகள் என்றும் அவை அந்த காலக்கட்டத்தில் அனுமதிக்கப்பட்ட சூரிய ஒளி மின் உற்பத்தியைவிட கூடுதல் என்பதால் தன்னுடைய பயன்பாட்டில் இறக்குமதி மின் அலகுகள் அதிகமாக இருந்ததால் அதற்குறிய கட்டணத்தை செலுத்த வலியுறுத்தும் எதிர்மனுதாரரின் கோரிக்கையை தள்ளுபடி செய்ய எழுப்பும் கோரிக்கை சரியா என்பதை ஆராய விரும்புகிறேன்.

9.2 இந்த பிரச்சனை சம்பந்தமான காலகட்டத்தில் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்யும் prosumer-க்கான தகுதியானவர்கள் யார் என்று அறிய கீழ்க்கண்ட தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணை எண் 03/2013-இல் பத்தி எண் 2 கீழே ஆய்வுக்கு கொடுக்கப்படுகிறது.

***"2. Eligible consumers for Net-metering***

*2.1. The categories of consumers eligible for net-metering have been prescribed under Clause 15 and 22.1 of the Tamil Nadu Solar Energy Policy 2012. Such categories have not been defined in the Commission's regulations or orders. To give more clarity and for easy implementation, the categories of consumers covered under HT tariff II-A, HT tariff III, LT tariff I-A, LT tariff I-C, LT tariff II-A, LT tariff II-B (1) and LT tariff V as specified in the Commission's retail tariff order in force are considered to be the "Eligible Consumers" for the purpose of Net-metering. Both the*

*existing and new Solar rooftop/Solar systems which comply with this order are eligible for Net-metering."*

மேற்கூறிய ஆணைப்படி net metering முறையில் Tariff 1A மற்றும் V–இல் உள்ளவர்கள் மின் உற்பத்தி செய்யலாம் என்று அறிய முடிகிறது.

9.3 மேலும் ஆணை எண் 3/2019–ஐ ஆராய விரும்புகிறேன்.

***(iii) Order No. 3 of 2019 dated 25-03-2019***

***2.0 Applicability :***

*2.1 This order on new scheme of rooftop Solar generation, namely, Solar net feed in-consumer category is applicable to all new applicants from the Eligible consumer category notified in para 3.0 of this order. The date of effect of this order is 25.03.2019, the date of passing of order by the Commission in M.P No.9 of 2017.*

*2.2 The existing consumers under the net metering scheme shall continue to be governed by the provisions in the Order No.3 of 2013 dt.13.11.2013.*

***3.0 Eligible consumers:***
*3.1 Consumers under Low Tension category except Hut and Agricultural category of tariff.*

மேற்கூறிய ஆணையின்படி தாழ்வழுத்த மின் நுகர்வோர் அனைவரும் குடிசை மற்றும் விவசாய மின் இணைப்பு பயனீட்டாளர்கள் தவிர net billing or net feed in முறையில் தகுதியானவர்கள் என்றும் மற்றும் ஏற்கனவே net metering–இல் இருப்பவர்கள் அதனை தொடரலாம் என்றும் அறிய முடிகிறது.

மேலும் அம்மின்னிணைப்புகளில் அந்த காலகட்டத்திலிருந்த தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுளளது.

| வ. எண். | மின் இணைப்பு எண். | கட்டண விகிதம் | அனுமதிக்கப்பட்ட மின்தேவை | அனுமதிக்கப்பட்ட சூரிய ஒளி மின் உற்பத்தி திறன் | அனுமதிக்கப்பட்ட சூரிய ஒளி மின் உற்பத்தி நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 220–006–15 | V | 3.85 KW | 1.85 KW | 26.07.2019 |
| 2 | 220–006–760 | V | 3.0 KW | 2.00 KW | 09.07.2015 |
| 3 | 220–006–952 | V | 3.92 KW | 3.00 KW | 03.06.2015 |

9.4 மேலும், சூரிய ஒளி மின் உற்பத்தியை கணக்கீடு செய்வதற்கான வழிமுறைகள் Grid Interactuve Solar PV Energy Generating Systems Regulations 2021–விதி 5.4 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"5. Metering Arrangement*

*xxx*

*xxx*

*5.4 For consumers up to the sanctioned load of 10 kw, the generation of solar energy shall be computed based on the stipulated CUF or energy recorded in the inverter whichever is lower in lieu of installation of gross meter for such assessment. If any dispute arises over such method of compution of energy and assessment of demand, the aggrieved party can install the generation meter at his cost to enable actual assessment of readings relating to the generation."*

*(The Capacity Utilization Factor (CUF) or Plant Load Factor (PLF) is defined as the actual output from a solar power plant over the year to the maximum possible output from it for a year under ideal condition).*

மேற்கண்ட விதிமுறையின்படி மின்சுமை 10 KW வரை ஒப்புதலளிக்கப்பட்ட நுகர்வோருக்கு சூரிய ஒளி மின் உற்பத்தியை மொத்த மின்உற்பத்தி மின்அளவியை அமைத்து கணக்கிடுவதற்கு பதிலாக நிர்ணயிக்கப்பட்ட CUFஇன் அடிப்படையிலோ அல்லது inverter–இல் பதிவு செய்யப்பட்ட மின்சக்தி அளவு இதில் எது குறைவோ அதன் அடிப்படையிலே கணக்கிடப்படவேண்டும். ஆகவே மேற்கூறிய மின் இணைப்புகளில் சூரிய ஒளி சக்தி மூலம் உற்பத்தி செய்ய உட்சபட்ச CUF 21% அடிப்படையில் (பல்வேறு காலகட்டங்களில் 19%–லிருந்து 21% CUF –வரை வரையறை செய்யப்பட்டிருந்தாலும் எதிர்மனுதாரர் CUF 21% என கணக்கீடு எடுத்துள்ளார்).

9.5 இந்நிலையில் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பில் தன்னிச்சையாக சோலார் பேனல்களை அனுமதியின்றி இணைத்து அதன் மூலம் சூரிய ஒளி சக்தியால் மின் உற்பத்தி செய்து மின் கட்டமைப்பில் பாதுகாப்பு விதிகளுக்கான CEIG safety certificate பெறாமலும் மின் கட்டமைப்பில் மின்மாற்றியின் உயரழுத்த கொள்ளளவு 90% மேல் அனுமதித்ததாகவும் வாதிட்டார். மேலும், Evidence Act–இன் அடிப்படையில் எதிர்மனுதாரர் எழுப்பிய துண்டறிக்கையின் காலகட்டத்தில் மேல்முறையீட்டாளரின் பேரேட்டினை ஆராய விரும்புகிறேன்.

Import & Export details of service No. 220-006-15

| Billing month | Export units | Eligible export units | Import units |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (5) |
| 13.09.2019 | 5236 | 555 | 626.7 |
| 14.11.2019 | 4000 | 555 | 916 |
| 14.01.2020 | 2357 | 555 | 9021 |
| 16.03.2020 | 5531 | 555 | 7970 |
| 15.05.2020 | 8250 | 555 | 7945 |

| | | | |
|---|---|---|---|
| 15.07.2020 | 6380 | 555 | 6677 |
| 18.09.2020 | 6239 | 555 | 7419 |
| 10.11.2020 | 5735 | 555 | 7644 |
| 08.01.2021 | 3867 | 555 | 9539 |
| 12.03.2021 | 4801 | 555 | 7958 |
| 10.05.2021 | 6505 | 555 | 8299 |
| 13.07.2021 | 8281 | 555 | 8099 |
| 13.09.2021 | 6309 | 555 | 8794 |
| 12.11.2021 | 5117 | 555 | 8130 |
| 12.01.2022 | 3938 | 555 | 8205 |
| 11.03.2022 | 7510 | 555 | 7548 |

**IMPORT & EXPORT DETAILS OF SERVICE NO 220-006-760**

| Billing Month | Export units | Eligible Export Units | Import units |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (5) |
| 09.03.2016 | 670 | 600 | 920 |
| 09.03.2018 | 1050 | 600 | 710 |
| 09.07.2018 | 920 | 600 | 1000 |
| 12.09.2018 | 960 | 600 | 1300 |
| 12.11.2018 | 660 | 600 | 950 |
| 16.01.2019 | 660 | 600 | 740 |
| 15.03.2019 | 690 | 600 | 980 |
| 16.05.2019 | 1013 | 600 | 992 |
| 17.07.2019 | 990 | 600 | 774 |
| 10.05.2021 | 676 | 600 | 930 |
| | | | |

**IMPORT & EXPORT DETAILS OF SERVICE No 220-006-952**

| Billing Month | Export units | Eligible Export Units | Import units |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (5) |
| 09.03.2018 | 1510 | 900 | 1080 |
| 09.05.2018 | 1360 | 900 | 1310 |
| 09.07.2018 | 1350 | 900 | 1510 |
| 12.09.2018 | 1100 | 900 | 2170 |
| 13.05.2019 | 2283 | 900 | 2275 |
| 12.07.2019 | 6337 | 900 | 2535 |
| 14.09.2019 | 1971 | 900 | 2393 |
| 14.11.2019 | 1820 | 900 | 1495 |
| 08.09.2020 | 1111 | 900 | 1024 |
| 10.11.2020 | 996 | 900 | 1450 |

| | | | |
|---|---|---|---|
| 10.05.2021 | 1110 | 900 | 1336 |
| 09.09.2021 | 905 | 900 | 1425 |
| 11.03.2022 | 1231 | 900 | 1363 |

9.6 மேற்கூறிய நுகர்வோர் பேரேட்டின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட உட்சபட்ச அளவைவிட கூடுதலாக சூரிய ஒளி மூலம் மின் அலகுகள் உற்பத்தியானது தெரியவருகிறது. இந்த அனுமதிக்கப்பட்ட மின்அளவைவிட கூடுதலாக inadvertent injection இருந்தால் அதன் பொருட்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் *GISS Regulation 2021 மற்றும் Order no.8 at 22.10.2021-ஐ ஆராய விரும்புகிறேன்.*

> ***GRID Interactive Solar PV Energy Generating Systems Regulations – 2021***
> ***6.9 General***
> *(1) Any other charges determined by the Commission from time to time shall be leviable to the eligible consumer/prosumer/generator,*
>
> *6.10 For the purpose of billing the import, export and net energy, the units and other allied parameters recorded in the respective import and export and net register of the consumer bidirectional meter shall be reckoned respectively. The maximum demand recorded in the gross generation meter or inverter, as the case may be, shall not exceed the sanctioned/contracted plant capacity of GISS in any billing cycle. If the demand exceeds the sanctioned limit in anybilling cycle, the quantum of exported units recorded in the bi-directional meter during the respective demand integration period (DIP) in case of gross metering and respective billng cycle in case of net-metering and net billing, proportionate to the portion of demand that exceeded over the sanctioned limit, shall be treated as inadvertent injection into the grid and shall not be eligible for payment by the Licensee;*
>
> *Clause 11.4 General;*
>
> > *"For the purpose of billing the import, export and net energy, the units and other allied parameters recorded in the respective import and export and net register of the consumer bidirectional meter shall be reckoned respectively. The maximum demand recorded in the gross generation meter or inverter as the case may be shall not exceed the sanctioned/ contracted plant capacity of GISS in any billing cycle. If the demand exceeds the sanctioned limit in any billing cycle, the quantum of exported units recorded in the bidirectional meter during the respective slots in case of gross metering and respective billing cycle in case of net-metering and net billing, proportionate to the portion of demand that exceeded over the sanctioned limit, shall be treated as inadvertent injection into the grid and shall not be eligible for payment by the Licensee."*

9.7 மேற்கூறிய விதிகளை ஆராயும் போது திட்ட அனுமதியின்றி கட்டமைப்பில் சூரிய ஒளியின் மூலம் மின் உற்பத்தி உட்செலுத்துதல் (inadvertent injection) இருந்தால்

அதற்காக உரிமதாரரிடமிருந்து எந்தவிதமான மின் கட்டணமும் பெற பயனீட்டாளர் தகுதியற்றவர் என்று தெரியவருகிறது.

9.8 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்புகளில் உட்சபட்ச சூரிய ஒளி மின் உற்பத்தி CUF 21% என்ற அடிப்படையில் கீழ்கண்டவாறு எதிர்மனுதாரரால் கணக்கிடப்பட்டுள்ளது.

(PV capacity x CUF (21%) x 24 x No. of days in billing cycle)

220-006-15 - 555 யூனிட்கள்

220-006-760 - 600 யூனிட்கள்

220-006-952 - 900 யூனிட்கள்

மேற்கண்ட கணக்கீடானது பத்தி 9.4-ல் உள்ள வழிமுறைகளின்படியே கணக்கிடப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. மேலும், Evidence Act-இன் அடிப்படையில் மின் நுகர்வோர் அடிப்படை அனுமதி பெறாமல் சூரிய ஒளி மின் உற்பத்தி ஏற்றுமதியானது நுகர்வோர் பேரேட்டின்படி உறுதியாகிறது. எனவே, அவ்வாறு அனுமதிக்கப்பட்ட மின்அளவைவிட கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டிருந்தால் அதை inadvertent injection ஆக கருதவேண்டும் என்பது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் GISS Regulation 2021 மற்றும் Order no.8 at 22.10.2021-ன்படி ஏற்புடையதாக உள்ளது.

9.9 ஆனால் அக்காலகட்டத்தில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்புகளில் export யூனிட்டுக்கும் import யூனிட்டுக்கும் உள்ள வித்தியாசத்தின் அடிப்படையில் அவருடைய மின் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் உட்கூறு ஆராயந்தால் மேல்முறையீட்டாளருக்கு eligible unit மற்றும் import unit-இன் அடிப்படையிலேயே கணக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண் 220-006-15-இல் அவருடைய அனுமதிக்கப்பட்ட சோலார் PV Panel capacity 1.85 KW-க்கு பதிலாக (117 Nos. x 270 W = 36.97 kw) 36.97 kw இணைத்து CEIG Safety Certificate பெறாமலும் மின் கட்டமைப்பின் மின்மாற்றியின் கொள்ளளவு திறனுக்கு பாதிப்பு ஏற்படும் அளவிற்கு திட்ட அனுமதியின்றி கட்டமைப்பில் சூரிய ஒளி சக்தியின் மூலம் மின் உற்பத்தி உட்செலுத்தியது (inadvertent injection) உறுதியாகிறது. மேலும் மின் இணைப்பு எண்

220–006–760 மற்றும் 220–006–952–லும் இது உறுதியாகிறது. ஆகவே, இதன் மூலம் மின் நுகர்வோர் வாரியத்திற்கு கூடுதலாக import unit மூலம் மின் நுகர்வு செய்த நிலையில் அக்கட்டணத்தை செலுத்த வேண்டும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் சரி என்று தீர்மானிக்கப்படுகிறது.

9.10 மேலும் மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் export ஆகும்போதெல்லாம் development charges, testing fees உரிமதாரரால் பெறப்பட்டதால் தன்னுடைய செயல் கூடுதல் சூரிய ஒளி மின் உற்பத்தி செய்யும் பேனல்கள் இணைத்ததை வாரியம் ஒப்புக் கொண்டதாக வாதிட்டார். மேலும் வேறு வாய்ப்பில்லாமல் போகவே, நெட் மீட்டரிங் சர்வீஸில், எல்லா export and import விபரங்கள் பதிவாகிறதாலும், இந்திய அளவில் சோலார் பேனல்கள் அமைப்பது ஊக்கப்படுத்தப்பட்டு, தமிழகம் முதல் நிலையில் இருப்பதாலும், தான் நல்லதுதானே செய்கிறோம் என்ற எண்ணத்தில் சோலால் பேனல்களின் அளவை அதிகரித்துவிட்டதாகவும் எதிர்பார்த்தபடியே வாரியத்தில் இருந்து எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றும் தன்னுடைய வாக்குமூலத்தை அவர் அளித்த ஆவணங்களில் பதிவு செய்ததும் தெரிய வருகிறது. ஆகவே, மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் மின் உற்பத்தி அதிகரிப்பதற்காக கூடுதல் சோலார் PV panel இணைத்தது உறுதியாகிறது. மேலும், தற்சமயம் அவர் தன்னுடைய வாதத்தில் export–ஆன காலகட்டத்தில் உட்சபட்ச மின்பளுவிற்கு வளர்ச்சி கட்டணம் செலுத்தியதாக வாதிட்டுள்ளார்.

9.11 ஆனால் நுகர்வோரின் பேரேட்டை ஆய்வு செய்ததில் மேல்முறையீட்டாளரின் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி பெறுவதற்கான மின் இணைப்பு 220–006–15 பெறும்போது அனுமதிக்கப்பட்ட மின்பளு தேவை 1.85KW ஆக இருந்தது அறியமுடிகிறது. ஆனால் மேல்முறையீட்டாளர் சூரிய ஒளி மின் இணைப்பு பெற்ற பிறகு அனுமதிக்கப்பட்ட மின்பளுவைவிட கூடுதலாக பயன்படுத்தியது நுகர்வோர் பேட்ரேட்டின் மூலம் கீழ்க்கண்டவாறு தெரிய வருகிறது.

| 220-006-15 | |
|---|---|
| Reading date | Import MD (KW) |
| 13.09.2019 | 3.56 |
| 14.11.2019 | 9.49 |
| 14.01.2020 | 12.08 |
| 16.03.2020 | 13.68 |

| | |
|---|---|
| 15.05.2020 | 12.71 |
| 15.07.2020 | 13.07 |
| 08.09.2020 | 17.93 |
| 10.11.2020 | 14.76 |
| 08.01.2021 | 12.78 |
| 12.03.2021 | 13.20 |
| 10.05.2021 | 17.54 |
| 13.07.2021 | 12.96 |
| 13.09.2021 | 10.55 |
| 12.11.2021 | 10.31 |
| 12.01.2022 | 10.38 |
| 11.03.2022 | 11.64 |
| 11.05.2022 | 15.43 |
| 11.07.2022 | 13.56 |

9.12 இதன் மூலம் மேல்முறையீட்டாளர் export MD–க்கான வளர்ச்சி கட்டணம் பெறப்பட்டது என்ற வாதம் நிராகரிக்கப்படுகிறது. ஆனால் ஆவருடைய மின் பயன்பாட்டில் import MD –இன் மூலம் தன்னுடைய மின் பயன்பாடுகளை மின் இணைப்பில் பயன்படுத்தியது உறுதியாகிறது. ஆகவே, அவர் prosumer என்ற அடிப்படையில் 1.85 kw–க்குதான் சூரிய சக்தி மூலம் உற்பத்தி செய்ய முடியும். ஆகவே, வெவ்வேறு காலகட்டத்தில் excess import MD அடிப்படையில் பயன்படுத்தியதனால் துண்டறிக்கையின் மூலம் கூடுதல் தொகை எழுப்பிய காலகட்டத்தில் இருந்த TNERC Supply code Regulation 5(2)(b)–ஐ ஆராய விரும்புகிறேன்.

> *"5. Miscellaneous charges*
> *xxx*
> *xxx*
> *(2)(b) For other categories of LT services with contracted demand equal to or less than 18.6 KW (25 HP), the excess demand charges shall not be applicable where the connected load is equal to or less than the contracted demand."*

9.13 மேற்கூறிய விதியின்படி ஒப்பந்த மின்பளுவைவிட கூடுதலாக பயன்படுத்தும் போது அதற்குறிய கட்டணங்களை வசூலிக்க வேண்டும் என்பது உறுதியாகிறது. அதன் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண் 220–006–15–இல் 18.01.2020 அன்று 3.85–லிருந்து 13 Kw பயன்படுத்தியதாலும், 17.07.2020 அன்று 13 Kw–லிருந்து 14 Kw பயன்படுத்தியதாலும், 12.11.2020 அன்று 14 Kw–லிருந்து 18 Kw பயன்படுத்தியதாலும் அதற்கான கட்டணங்கள் வசூலிக்கப்பட்டது தெரிய வருகிறது.

9.14 மேலும் மின் இணைப்பு எண் 220-006-760-இல் அனுமதிக்கப்பட்ட மின் பளு 2.63 kw-லிருந்து கூடுதலாக 5 Kw பயன்படுத்தியதும், அதன் பின்பு தன்னுடைய மின்பளுவை 14.01.2020-இல் 5 Kwலிருந்து 2 Kw ஆக குறைத்த பின்பு மீண்டும் 2 Kwலிருந்து 3 Kw ஆக 11.09.2020-இல் பயன்படுத்தியதால் அதற்கான கட்டணங்கள் வசூலிக்கப்பட்டது தெரியவருகிறது.

9.15 மேலும் மின் இணைப்பு எண் 220-006-952-இல் 0.12 Kw-லிருந்து 3.92 Kw ஆக 14.02.2015 அன்று பயன்படுத்தியதும், மீண்டும் கூடுதலாக 3.92 Kw லிருந்து 5.10 Kw 04.07.2015 அன்று பயன்படுத்தியதும், மீண்டும் 5.10 Kwலிருந்து 6.1 Kw ஆக 19.03.2016 பயன்படுத்தியதும், மீண்டும் 6.1 Kw-லிருந்து 7.39 Kw ஆக 22.06.2018 பயனபடுத்தியதும் மேலும் 7.39 Kwலிருந்து 9 Kw ஆக 28.09.2018 அன்று பயன்படுத்தியதும், 9 Kwலிருந்து 10 Kw ஆக 15.05.2019 அன்று பயன்படுத்தியதும், 10 Kw லிருந்து 15Kw ஆக 12.07.2021 பயன்படுத்தியதும் அதற்கான கட்டணங்கள் வசூலிக்கப்பட்டதும் தெரியவருகிறது. ஆகவே, மேல்முறையீட்டாளர் தன்னுடைய export MD-க்கு ஒவ்வொரு மின் இணைப்பிலும் வசூலித்ததாக வாதிடுவது நிராகரிக்கப்படுகிறது.

9.16 வாரியத்தில் செயற்பொறியாளராக இருந்து தற்சமயம் நுகர்வோராக செயல்படும் மேல்முறையீட்டாளர் தனக்கு முன்பே எதிர்மனுதாரர் தெரிவித்திருந்தால், தான் அந்த காலகட்டத்திலேயே மின் நுகர்வும் மின் உற்பத்தியும் செய்யும் நுகர்வோருக்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பேன் என்ற வாதம் பொருந்தாது என்பதற்காக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பகிர்மான விதி 42 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"42 Knowledge of Acts, Rules, Regulations, Order, etc.: Subject to the provisions contained in Note 1 to sub-regulation (13) of regulation 29, the consumer will be deemed to have full knowledge of the provisions of 'applicable Acts, Rules and all Regulations and Notifications' made there under. The consumer shall act in due conformity with all the applicable Acts, Rules and all Regulations and Notifications mentioned above."*

9.17 ஆகவே, நுகர்வோர் உரிய காலத்தில் தெரிந்திருந்தால் தன்னால் கூடுதல் சோலார் PV இணைத்த காலத்தில் நடவடிக்கை எடுத்திருக்க முடியும் என்ற வாதம் நிராகரிக்கப்படுகிறது. மேலும் மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர் துண்டறிக்கை மூலம் கூடுதல் தொகை கேட்கும் காலகட்டத்தில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய சூரிய ஒளி மின் உற்பத்தி இணைக்கப்பட்ட உரிமதாரரின் மின் இணைப்புகளில் வெவ்வேறு

கால கட்டத்தில் கூடுதல் சோலார் பேனல்களை தன்னிச்சையாக CEIG safety certificate அனுமதி பெறாமலும், மேலும் உரிமதாரரின் மின் கட்டமைப்பில் 90% வரை மின்மாற்றியின் rated capacity–க்கு பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் நிலையில் inadvertent injection of solar generation–ஐ மின் கட்டமைப்பில் செலுத்தியது மிக தவறான செயலாகும். ஆகவே, prosumer என்ற அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட மின்தேவையைவிட கூடுதலாக மின் உற்பத்தி செய்ததன் அடிப்படையில் மின் கட்டணம் நேர் செய்யப்பட்டது நிராகரிக்கப்படுகிறது. ஆகவே எதிர்மனுதாரர் துண்டறிக்கையின் (short levy) மூலம் விடுப்பட்ட மின் அலகுக்கான தொகையை சூரிய ஒளி மின் உற்பத்தி அனுமதி பெற்ற காலகட்டத்தில் உள்ள net metering, net billing or net feed–in method–இல் மின் இணைப்பு எண். 220–006–15, 220–006–760 மற்றும் 220–006–952–இல் வசூலிக்குமாறு உத்திரவிடப்படுகிறது. மேலும் மேற்கண்ட மின்னிணைப்புகளில் ஏற்கனவே செலுத்தப்பட்ட 25% தொகையை மேல்முறையீட்டாளரின் நிலுவையில் உள்ள தொகையில் நேர்செய்ய எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

**10.0 முடிவுரை:**

10.1 மேற்கூறிய பத்திகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பு எண் 220–006–15, 220–006–760 மற்றும் 220–006–952–இல் அனுமதி பெறாமல் inadvertent injection மூலம் மின் உற்பத்தி ஏற்றுமதி செய்த செயல் நிராகரிக்கப்பட்டு உரிய eligible unit அடிப்படையில் கணக்கீடு செய்து வசூலிக்குமாறு உத்திரவிடப்படுகிறது.

10.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 28/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1. திரு A. ஜெயகோபால், – By RPAD
வாழ்க வளமுடன் இல்லம்,
எண்.3, வாழ்க வளமுடன் தெரு,
திண்டுக்கல் – 624 001.

2. செயற்பொறியாளர்/ வடக்கு/ திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சி நாயக்கன்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் – 624 002.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சி நாயக்கன்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் – 624 002.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.